c.The commercial water connection shall include connections to commercial buildings related to business and work-related buildings which include canteens, restaurants, tea/coffee shops, Marriage halls, theatres and other business places.	c. வணிகம் தொடர்பான வணிக கட்டிடங்கள் மற்றும் வியாபாரம் பணி தொடர்பான கட்டிடங்களான கேன்டீன்கள், உணவகங்கள், தேநீர்/காபி கடைகள், திருமண மண்டபங்கள், திரையரங்குகள் மற்றும் பிற வணிக இடங்களுக்கு வழங்கும் குடிநீர் இணைப்பு வணிக குடிநீர் இணைப்பாக வழங்கப்படும்.
5.(iii). Industrial water connections shall include connection to industrial buildings and all other organizations certified under the Factories Act, 1948 such as soda making companies, ice manufacturing companies, rice mills and all Small-Scale Industries.	iii. தொழில்துறை கட்டிடங்கள் மற்றும் 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் சான்றளிக்கப்பட்ட அனைத்து பிற அமைப்புகளில் உள்ள அதாவது சோடா தயாரிக்கும் நிறுவனங்கள், ஐஸ் உற்பத்தி நிறுவனங்கள், அரிசி ஆலைகள் மற்றும் அனைத்து சிறு அளவிலான தொழில்கள் புரியும் கட்டடங்களுக்கு தொழில்துறை ரீதியிலான குடிநீர் இணைப்புகளாக வழங்கப்படும்.
a.The water connections to buildings owned by the Erode City Municipal Corporation and maintained by tenants or lessees shall be classified as domestic or non-domestic connection depending on the end use of the building.	a.மாநகராட்சிக்குச் சொந்தமான கட்டிடங்களுக்கான குடிநீர் இணைப்புகள், கட்டங்களை பயன்படுத்தும் வாடகைதாரர்கள் அல்லது குத்தகைதாரர்கள் அவர்களால் பராமரிக்கப்பட்டு வரும், கட்டிடத்தின் இறுதிப் பயன்பாட்டைப் பொறுத்து வீடு அல்லது வீடு அல்லாத இணைப்பு என வகைப்படுத்தப்படும்.
b. All commercial and industrial connections other than domestic shall be classified as non-domestic	b.வீட்டு இணைப்புகள் தவிர மற்ற அனைத்து வணிக மற்றும் தொழில்துறை இணைப்புகளும் வீட்டு இணைப்புகள் அல்லாதவை என வகைப்படுத்தப்படும்.
6. (i). For a domestic water connection, the charges will be levied as per non-domestic rates if the consumption is found to be more than twice the base level of supply as specified in Table-2 consecutively for two billing periods.	6.(i.) வீட்டு குடிநீர் இணைப்பிற்கு, இரண்டு பில்லிங் காலங்களுக்கு தொடர்ச்சியாக அட்டவணை-2 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி அடிப்படை விநியோக அளவை விட இரண்டு மடங்கு அதிகமாக நுகர்வாக இருப்பின் வீட்டு உபயோகமற்ற விகிதங்களின்படி கட்டணம் வசூலிக்கப்படும்.
6.(ii).If any building with a water connection is demolished, then the water connection shall be disconnected.	6.(ii). குடிநீர் இணைப்பு உள்ள எந்தவொரு கட்டிடமும் இடிக்கப் பட்டால், அக்குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படும்.

6.(iii). In case of construction of additional floors / area or major renewal works are carried out in the existing domestic building using the Erode City Municipal Corporation water, then the water consumption will be considered as non-domestic, and charges shall be levied accordingly.	6.(iii). மாநகராட்சி குடிநீரைப் பயன்படுத்தி, ஏற்கனவே உள்ள வீட்டுக் கட்டிடத்தில் கூடுதல் தளங்கள்/பகுதிகள் கட்டுதல் அல்லது மிகபெரிய புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டால், குடிநீர் நுகர்வு வீடு அல்லாத இணைப்பாக கருதப்பட்டு, அதற்கேற்ப கட்டணம் வசூலிக்கப்படும்.
6.(iv).On completion of such additional construction / renewal works, the consumer shall apply for revised tax assessment to the Erode City Municipal Corporation and shall pay the additional charges, including penal charges as applicable and to get an order for conversion to a domestic connection after due verification / inspection by the Erode City Municipal Corporation authorities.	6.(iv). கூடுதல் கட்டுமான /புதுப்பித்தல் பணிகள் முடிந்ததும், நுகர்வோர் மாநகராட்சிக்கு திருத்தப்பட்ட வரி மதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வேண்டும், மேலும் கட்டுமான / புதுப்பித்தல் பணி முடிக்கப்பட்ட கட்டத்தின் அரையாண்டுக்குரிய வரிவிதிப்பு கட்டணங்கள் மற்றும் அபராதக் கட்டணங்கள் உட்பட கூடுதல் கட்டணங்களைச் செலுத்த வேண்டும். மாநகராட்சி அதிகாரிகளின் உரிய சரிபார்ப்பு / ஆய்விற்குப் பிறகு வீட்டு இணைப்பாக மாற்றுவதற்கான உத்தரவைப் பெற வேண்டும்.
7.(1) For every household assessed under property tax, one water supply connection shall be given. For those connections, flow control valve and gate valve shall be fixed to control the flow of water. Households having water supply connections shall use water only for their exclusive uses and shall not supply water to other households having no water supply connection.	7.(1).சொத்து வரியின் கீழ் மதிப்பிடப்பட்ட ஒவ்வொரு வீட்டிற்கும், ஒரு குடிநீர் விநியோக இணைப்பு வழங்கப்படும். அந்த இணைப்புகளுக்கு, நீர் ஓட்டத்தை கட்டுப்படுத்த ஓட்ட கட்டுப்பாட்டு வால்வு மற்றும் கேட் வால்வு பொருத்தப்பட வேண்டும். நீர் விநியோக இணைப்புகளைக் கொண்ட வீடுகள் தங்கள் பிரத்தியேக பயன்பாட்டிற்கு மட்டுமே தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும் மற்றும் குடிநீர் விநியோக இணைப்பு இல்லாத பிற வீடுகளுக்கு நீர் வழங்கக்கூடாது.
7.(2) For the purpose of providing Water supply connection for Apartments. a.While giving water supply connections to apartments having two or more households, every household **(No. of Property tax assessment)** shall be separately assessed, and deposit shall be collected separately from each of the flats or apartments.	7.(2) அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கல் இணைப்பை வழங்குவதற்காக. a)இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வீடுகளைக் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கல் இணைப்புகளை வழங்கும்போது, ஒவ்வொரு வீட்டிற்கும் (சொத்து வரி மதிப்பீட்டின் எண்ணிக்கை) தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும், மேலும் ஒவ்வொரு அடுக்குமாடி குடியிருப்புகளி லிருந்தும் தனித்தனியாக வைப்புத் தொகை வசூலிக்கப்பட வேண்டும்.
b.Irrespective of multiple property tax assessments in an apartment, the water supply connection shall be provided as total distribution system, considering the total	b)ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் பல சொத்து வரி மதிப்பீடுகள் இருந்தாலும், மொத்த தேவையைக் கருத்தில் கொண்டு, மாநகராட்சி பொறியாளரின் ஒப்புதலின் பேரில்,

demand and upon approval by the City Engineer. Individual connections will not be provided for each flat. The number of physical connections, size of service connection pipe, size of ferrule and rating of flow control valve shall be designed and decided by the City Engineer taking into account the total number of dwellings, total water supply demand etc. and the water service connection shall be provided after getting approval of the Commissioner.	குடிநீர் வழங்கல் இணைப்பு மொத்த விநியோக அமைப்பாக வழங்கப்படும். ஒவ்வொரு அடுக்குமாடி குடியிருப்புக்கும் தனிப்பட்ட இணைப்புகள் வழங்கப்படாது. மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை, மொத்த குடிநீர் வழங்கல் தேவை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, மாநகராட்சி பொறியாளர் வடிவமைத்து முடிவு செய்வார். மேலும், ஆணையரின் ஒப்புதலைப் பெற்ற பிறகு குடிநீர் சேவை இணைப்பு வழங்கப்படும்.
c.Every Property tax assessment should be treated as single unit for assessment of water supply connection and user charges and its details are specified in the Table below:-	c) ஒவ்வொரு சொத்து வரி மதிப்பீட்டையும் குடிநீர் விநியோக இணைப்பு மற்றும் பயனர் கட்டணங்களை மதிப்பிடுவதற்கு ஒற்றை அலகாகக் கருத வேண்டும், மேலும் அதன் விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளன:-

Sl.No வ. எண்	Apartments குடியிருப்புகள்	No. of Connection இணைப்புகளின் எண்ணிக்கை	Deposit வைப்புத் தொகை	Size of Pipe (in. dia) குழாய்களின் அளவு (விட்டத்தில்)
1	Up to 4 Flats 4 வீடுகள் வரை	1 Connection 1 இணைப்பு		Decided by City Engineer மாநகர பொறியாளரால் தீர்மானிக்கப்படும்
2	From 5 to 8 Flats 5 முதல் 8 வீடுகள் வரை	2 Connections 2 இணைப்புகள்		
3	From 9 to 12 Flats 9 முதல் 12 வீடுகள் வரை	3 Connections 3 இணைப்புகள்		
4	Above 12 Flats 12 வீடுகளுக்கு மேல்	1 Connection for each 4 Flats ஒவ்வொரு 4 வீடுகளுக்கு 1 இணைப்பாக கருதப்படும்		

8.(1)Water supply connections in places of worship, used for public consumption purposes only, will be provided as follows:	8.(1)பொது நுகர்வு நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப் படும் வழிபாட்டுத் தலங்களில் குடிநீர் வழங்கல் இணைப்புகள் பின் வருமாறு வழங்கப்படும்:
a.The by-law applicable for providing domestic connections shall be applicable for providing water supply connections to places of worship	a.வீட்டு இணைப்புகளை வழங்கு வதற்குப் பொருந்தும் துணைச் சட்டம் வழிபாட்டுத் தலங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்குவதற்குப் பொருந்தும்.
b.The administrators of the places of worship are	b.வழிபாட்டுத் தலங்களின் நிர்வாகிகள் குழாய்கள்

responsible for laying pipelines, maintaining and removal of the same. The costs of maintenance shall be borne by them. The pipe lines shall have 15 mm diameter and shall be fixed with automatically closing water taps to prevent water losses.	அமைத்தல், பராமரித்தல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாவார்கள். பராமரிப்புச் செலவுகளை அவர்களே ஏற்க வேண்டும். குழாய் இணைப்புகள் 15 மிமீ விட்டம் கொண்டதாக இருக்க வேண்டும் மற்றும் நீர் இழப்பைத் தடுக்க தானியங்கி மூலம் குழாய் அடைப்பாணை குழாய்களில் பொருத்த வேண்டும்.
c.The water supply shall be used only for consumption and the charges shall be levied as per domestic rates.	c. குடிநீர் வழங்கல் நுகர்வுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் கட்டணங்கள் வீட்டு உபயோக கட்டணங் களின் படி வசூலிக்கப்படும்.
d.Non-domestic water supply connections shall be provided to the shops and other commercial complexes located near by the worship places which are maintained by the same administrators after payment of deposit and all other charges as applicable.	d.வீட்டு உபயோகமற்ற குடிநீர் வழங்கல் இணைப்புகள் வழிபாட்டுத் தலங்களுக்கு சொந்தமான அருகில் அமைந்து உள்ள கடைகள் மற்றும் பிற வணிக வளாகங்களுக்கு வைப்புத் தொகை மற்றும் அதற்குறிய அனைத்து கட்டணங்களையும் செலுத்திய பிறகு வழங்கப்பட வேண்டும்.
9.Water Supply. (1)The Buildings used for Government educational Institutions and Government Hospitals are exempted from payment of property tax and the water supply charges will be collected as per domestic charges.	9. குடிநீர் வழங்கல். (1) அரசு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளுக்குப் பயன்படுத்தப் படும் கட்டிடங்களுக்கு சொத்து வரி செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், வீட்டுக் கட்டணங்களின்படி குடிநீர் வழங்கல் கட்டணங்கள் வசூலிக்கப்படும்.
(2) Government office buildings and Public sector units: a.While giving water supply connections, the assessment shall be ensured and the by-laws applicable for providing non-domestic water supply connections shall be followed.	(2) அரசு அலுவலக கட்டிடங்கள் மற்றும் பொதுத்துறை அலகுகள்: a. குடிநீர் வழங்கல் இணைப்புகளை வழங்கும்போது, மதிப்பீடு உறுதி செய்யப்பட வேண்டும். மேலும், வீடு அல்லாத குடிநீர் வழங்கல் இணைப்புகளை வழங்குவதற்குப் பொருந்தக்கூடிய துணை விதிகள் பின்பற்றப்பட வேண்டும்.
b.Irrespective of property tax assessments, the water supply connection shall be provided as total distribution system, considering the total demand and upon approval by the City Engineer. Individual connections will not be provided for each building within the premises. The number of	b. சொத்து வரி மதிப்பீடுகளைப் பொருட்படுத்தாமல், மொத்த தேவையைக் கருத்தில் கொண்டு, மாநகரப் பொறியாளரின் ஒப்புதலின் பேரில், குடிநீர் விநியோக இணைப்பு மொத்த விநியோக முறையாக வழங்கப்படும். வளாகத்திற்குள் உள்ள ஒவ்வொரு கட்டிடத்திற்கும் தனிப்பட்ட இணைப்புகள் வழங்கப்படாது. மொத்த

physical connections, size of service connection pipe, size of ferrule and rating of flow control valve shall be designed and decided by the City Engineer taking into account the total number of students and officials, total water demand etc. and the water service connection(s) shall be provided after getting approval of the Commissioner.	மாணவர்கள் மற்றும் அதிகாரிகளின் எண்ணிக்கை, மொத்த குடிநீர் தேவை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, இணைப்புகளின் எண்ணிக்கை, சேவை இணைப்பு குழாயின் அளவு, ∴பெரூலின் அளவு மற்றும் ஓட்டக் கட்டுப்பாட்டு வால்வின் மதிப்பீடு ஆகியவை மாநகரப் பொறியாளரால் வடிவமைக்கப்பட்டு முடிவு செய்யப்படும். மேலும், ஆணையரின் ஒப்புதலைப் பெற்ற பிறகு, குடிநீர் சேவை இணைப்பு(கள்) வழங்கப்படும்.
c.For providing Water supply connections to the Anganwadis and City Municipal Corporation School buildings: such buildings are exempted to pay water supply charges.	c. அங்கன்வாடிகள் மற்றும் மாநகராட்சி பள்ளி கட்டிடங்களுக்கு குடிநீர் விநியோக இணைப்புகளை வழங்குவதற்கு குடிநீர் கட்டணங்களை செலுத்த விலக்கு அளிக்கப்படுகிறது.
d. Irrespective of property tax assessments, the water supply connection shall be provided as total distribution system, considering the total demand and upon approval by the City Engineer. Individual connections will not be provided for each building within the premises. The number of physical connections, size of service connection pipe, size of ferrule and rating of flow control valve shall be designed and decided by the City Engineer taking into account the total number of students and officials, total water demand etc. and the water service connection(s) shall be provided after getting approval of the Commissioner.	d. சொத்து வரி மதிப்பீடுகளைப் பொருட்படுத்தாமல், மொத்த தேவையைக் கருத்தில் கொண்டு, மாநகரப் பொறியாளரின் ஒப்புதலின் பேரில், குடிநீர் விநியோக இணைப்பு மொத்த விநியோக முறையாக வழங்கப்படும். வளாகத்திற்குள் உள்ள ஒவ்வொரு கட்டிடத்திற்கும் தனிப்பட்ட இணைப்புகள் வழங்கப்படாது. மொத்த மாணவர்கள் மற்றும் அதிகாரிகளின் எண்ணிக்கை, மொத்த குடிநீர் தேவை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, இணைப்புகளின் எண்ணிக்கை, சேவை இணைப்புக் குழாயின் அளவு, ∴பெரூலின் அளவு மற்றும் கட்டுப்பாட்டு வால்வின் மதிப்பீடு ஆகியவை மாநகரப் பொறியாளரால் வடிவமைக்கப்பட்டு முடிவு செய்யப்படும். மேலும், ஆணையரின் ஒப்புதலைப் பெற்ற பிறகு குடிநீர் இணைப்பு(கள்) வழங்கப்படும்.
10.a. While providing water supply connections, ferrules or flow control valves shall be fixed to ensure water supply at the rate of 5 litres per minute (lpm) per connection for domestic connections. All accessories for providing water supply connections such as stoppers, valves, meters etc., including the length of the pipe will be determined by the City Engineer or by his/her authorized representative in accordance with the following pipe sizes. i.Connection with 15mm diameter pipe – 10mm	10. a. குடிநீர் விநியோக இணைப்புகளை வழங்கும்போது, வீட்டு இணைப்புகளுக்கு நிமிடத்திற்கு 5 லிட்டர் (lpm) என்ற விகிதத்தில் நீர் விநியோகத்தை உறுதி செய்வதற்காக ∴பெரூல்கள் அல்லது கட்டுப்பாட்டு வால்வுகள் பொருத்த வேண்டும். குழாய் நீளம் உட்பட, ஸ்டாப்பர்கள், வால்வுகள், மீட்டர்கள் போன்ற குடிநீர் விநியோக இணைப்புகளை வழங்குவதற்கான அனைத்து பாகங்களும் மாநகரப் பொறியாளரால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் பின்வரும் குழாய் அளவுகளுக்கு ஏற்ப தீர்மானிக்கப்படும். i. இணைப்பின் நீளம் 100 அடிக்கு குறைவாக இருப்பின்

ferrule within 100 ft length ii.Connection with 20mmdiameter pipe - 15mmferrule for more than 100 feet length If any other measure is required, the same shall be decided by the City Engineer. All the fittings, ferrules, meters etc. shall comply with relevant IS Codes and Standards.	15 மிமீ விட்டம் கொண்ட குழாயுடன் இணைப்பு - 10 மிமீ ∴பெரூல். ii. இணைப்பின் நீளம் 100 அடிக்கு அதிகமாக இருப்பின் 20 மிமீ விட்டம் கொண்ட குழாயுடன் இணைப்பு - 15 மிமீ ∴பெரூல். வேறு ஏதேனும் அளவீடு தேவைப்பட்டால், அதை மாநகரப் பொறியாளர் முடிவு செய்வார். அனைத்து பொருத்துதல்கள், ∴பெரூல்கள், மீட்டர்கள் போன்றவை தொடர்புடைய ஐஎஸ் குறியீடுகள் மற்றும் தரநிலைகளுக்கு இணங்க வேண்டும்
b.If the water service pipeline happens to be taken across ditches, underground drainage or small bridges, which the City Engineer considers the same may cause damage to the pipes or may contaminate the water, then iron casing pipes shall be used for protecting the service connection pipes.	b. குடிநீர் சேவை குழாய், மழைநீர் வடிகால்கள், மற்றும் பாதாள சாக்கடை குழாய்கள் நிலத்தடி நீர் வடிகால் அல்லது சிறிய பாலங்கள் வழியாக எடுத்துச் செல்லப்பட்டால், அது குழாய்களுக்கு சேதத்தை ஏற்படுத்தலாம் அல்லது குடிநீர் மாசுபடுத்தலாம் என்று மாநகரப் பொறியாளர் கருதினால், சேவை இணைப்பு குழாய்களைப் பாதுகாக்க இரும்பு உறை குழாய்களைப் பயன்படுத்த வேண்டும்.
11.When the water connection has to be provided for a domestic which is more than 90 meters distance from the water distribution network, the City Engineer not below the rank of Executive engineer shall inspect the building premises and assess the technical feasibility of providing a water supply service connection duly following the above by-laws and provide the connection. If it is found to be technically not feasible, then shall examine whether the existing distribution system could be extended provided the extension shall be carried out in a public road and the design shall comply with the requirements as per CPHEEO Manual so as to provide the water service connection.	11. குடிநீர் விநியோக பிரதான குழாயிலிருந்து 90 மீட்டருக்கும் அதிகமான தூரத்தில் உள்ள ஒரு வீட்டிற்கு குடிநீர் இணைப்பு வழங்க வேண்டியிருக்கும் போது, நிர்வாக பொறியாளர் பதவிக்குக் குறையாத மாநகர பொறியாளர் கட்டிட வளாகத்தை ஆய்வு செய்து, மேற்கண்ட துணைவிதிகளைப் பின்பற்றி குடிநீர் விநியோக சேவை இணைப்பை வழங்குவதற்கான தொழில்நுட்ப சாத்தியக்கூறுகளை மதிப்பிட்டு இணைப்பை வழங்க வேண்டும். இது தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமற்றது எனக் கண்டறியப்பட்டால், நீட்டிப்பு ஒரு பொதுச் சாலையில் மேற்கொள்ளவதற்கு வழிவகை இருந்தால், தற்போதுள்ள விநியோக பிரதான குழாயை நீட்டிக்க முடியுமா என்பதை ஆராய வேண்டும். மேலும், வடிவமைப்பு CPHEEO கையேட்டின்படி குடிநீர் சேவை இணைப்பை வழங்கலாம்.
12.a.The fittings, joints, meters, taps, valves etc. used for providing the water supply service connections shall generally be visible for carrying out inspection by the City Engineer or by his/her authorized persons by the Erode City Municipal	12.a. குடிநீர் வழங்கல் சேவை இணைப்பு களை வழங்குவதற்குப் பயன் படுத்தப்படும் உதிரிபாகங்கள், இணைப்புகள், மீட்டர்கள், குழாய்கள், வால்வுகள் போன்றவை பொதுவாக மாநகரப் பொறியாளர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட நபர்களால் மாநகராட்சி

Corporation . The building owner or the tenant shall facilitate the authorities to monitor/inspect the provision of water service connections. Any objection by the owners/tenants will result in disconnection. b. While providing water service connections, all appurtenances shall be mounted within the building premises in a conspicuous area preferably near the entrance, from where the owners/tenants shall tap the water into their underground/ground level/elevated storage facilities. c.No electrical motors or pumps of any kind shall be used for sucking water directly from the water distribution pipeline. If the same is detected, the water supply connections will immediately be disconnected, and all such appliances will be seized. If the same detected for the second time, the Erode City Municipal Corporation shall initiate legal proceedings against the owner/tenant. d.If the owner/tenant whose water connection is disconnected due to usage of mechanical devices for sucking water directly from the distribution system, applies for water supply connection again, shall pay a penalty of Rs.10,000/- and disconnection/reconnection charges as applicable along with additional deposit as determined by the City Engineer and the Erode City Municipal Corporation shall provide reconnection upon receipt of the above amount.	மன்றத்தால் ஆய்வு செய்யத் தெரியும்படி இருக்க வேண்டும். கட்டிட உரிமையாளர் அல்லது குத்தகைதாரர் குடிநீர் சேவை இணைப்புகளை வழங்குவதை அதிகாரிகள் கண்காணிக்க / ஆய்வு செய்ய வசதி செய்ய வேண்டும். உரிமையாளர்கள் / குத்தகைதாரர்களின் எந்தவொரு ஆட்சேபனை தெரிவித்தால் இணைப்பு துண்டிக்கப்படும். b. குடிநீர் இணைப்புகளை வழங்கும் போது, கட்டிட வளாகத்திற்குள் அனைத்து சாதனங்களையும் நுழைவாயிலுக்கு அருகில் ஒரு தெளிவான பகுதியில் பொருத்தப்பட வேண்டும், கட்டட உரிமையாளர்கள் / குத்தகைதாரர்கள் தங்கள் நிலத்தடி/தரை மட்டம்/மேலே உள்ள சேமிப்பு தொட்டிகளில் குடிநீர் சேகரிக்கும் படி குடிநீர் குழாயை அமைத்துக் கொள்ளலாம். c. குடிநீர் விநியோகக் குழாயிலிருந்து நேரடியாக தண்ணீரை உறிஞ்சுவதற்கு எந்த வகையான மின் மோட்டார்கள் அல்லது பம்புகளையும் பயன்படுத்தக் கூடாது. அப்படி கண்டறியப்பட்டால், குடிநீர் விநியோக இணைப்புகள் உடனடியாக துண்டிக்கப்படும், மேலும் அது சம்பந்தமான அனைத்து சாதனங்களும் பறிமுதல் செய்யப்படும். இரண்டாவது முறையாகவும் இது கண்டறியப் பட்டால், மாநகராட்சியால் உரிமையாளர் / குத்தகைதாரர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கபடும் . d. குடிநீர் விநியோக அமைப்பிலிருந்து நேரடியாக தண்ணீரை உறிஞ்சுவதற்கு இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தியதற்காக குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்ட உரிமையாளர் / குத்தகைதாரர், மீண்டும் குடிநீர் விநியோக இணைப்புக்கு விண்ணப்பித் தால், ரூ.10,000/- அபராதம் மற்றும் துண்டிப்பு/மறு இணைப்பு கட்டணங்கள், மாநகரப் பொறியாளரால் தீர்மானிக்கப் பட்ட கூடுதல் வைப்புத்தொகையுடன் மற்றும் மாநகராட்சி மேற்கண்ட தொகையைப் பெற்றவுடன் மீண்டும் இணைப்பை வழங்க வேண்டும்.
13.a. While taking water supply service connection, the owner/tenant of the building shall provide the water meters approved by the City Engineer. The	13.a. குடிநீர் வழங்கல் சேவை இணைப்பைப் பெறும்போது, கட்டிடத்தின் உரிமையாளர்/ குத்தகைதாரருக்கு மாநகரப் பொறியாளரால்

meter shall be housed in a box which shall either be installed on the compound wall or on the ground within the building premises and shall be kept in a locked or sealed condition. The water consumed shall be calculated based on the meter readings to be taken periodically and the consumer shall be billed accordingly as per the applicable rates.	அங்கீகரிக்கப்பட்ட குடிநீர் மீட்டர்களை வழங்க வேண்டும். மீட்டர் ஒரு பெட்டியில் வைக்கப்பட வேண்டும், இது கட்டிட வளாகத்திற்குள் உள்ள வளாகச் சுவரில் அல்லது தரையில் பொருத்தப்பட்டு பூட்டப்பட்ட அல்லது சீல் வைக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட வேண்டும். அவ்வப்போது எடுக்கப்படும் மீட்டர் அளவீடுகளின் அடிப்படையில் நுகரப்படும் தண்ணீர் கணக்கிடப்படும், மேலும் நுகர்வோருக்கு பொருந்தக்கூடிய விகிதங்களின்படி கட்டணம் வசூலிக்கப்படும்.
b.The water meter shall be purchased, installed and maintained by the owner/tenant properly.	b. உரிமையாளர்/ குத்தகைதாரரால் குடிநீர் மீட்டர் வாங்கப்பட்டு, நிறுவப்பட்டு முறையாக பராமரிக்கப் பட வேண்டும்.
c.If the meter gets damaged, it shall immediately be repaired/replaced by the owner/tenant at their own cost under the supervision of the City Engineer or his/her authorized persons. Failure to replace the defective meters will result in disconnection of water supply.	c. மீட்டர் சேதமடைந்தால், அதை உடனடியாகஉரிமையாளர்/குத்தகைதாரர் தங்கள் சொந்த செலவில் மாநகரப் பொறியாளர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட நபர்களின் மேற்பார்வையின் கீழ் சரிசெய்ய வேண்டும். குறைபாடுள்ள மீட்டர்களை மாற்றத் தவறினால் குடிநீர் விநியோகம் துண்டிக்கப்படும்.

The Deposit and water consumption charges shall be payable by the owner/tenant as specified in the table below:

14(1) கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி வைப்புத்தொகை மற்றும் குடிநீர் நுகர்வு கட்டணங்களை உரிமையாளர்/ வாடகைதாரர் செலுத்த வேண்டும்:

Table-1: Water Supply Service Connection Deposit

அட்டவணை-1: குடிநீர் வழங்கல் சேவை இணைப்பு வைப்புத்தொகை

Plinth Area of Assessment in Sq.ft கட்டிடத்தின் அடித்தளப் பகுதி சதுர அடியில்	Water Supply Service Connection Deposit (in Rs./connection) குடிநீர் வழங்கல் சேவை இணைப்பு வைப்புத்தொகை (ரூ./இணைப்பு)			
	Domestic குடியிருப்புகள்	Non-Domestic வணிகம்	Industrial தொழிற்சாலை	Educational /Institution/ Government Offices/Others கல்வி நிறு னங்கள்/அரசு அலுலகங்கள்/மற்றவைகள்
Erode City Municipal Corporation (ஈரோடு மாநகராட்சி)				
<=600	7500	15000	15000	15000
601-1200	10000	20000	20000	20000
1201-1800	12500	25000	25000	25000

1801-3500	15000	30000	30000	30000
3501-5000	20000	40000	40000	40000
5001-10000	25000	50000	50000	50000
Above 10000	40000	80000	80000	80000

* This is the base rate for the plinth area of 10000 sq.ft. The deposit for the plinth area above 10000 sq.ft. shall be increased in proportion to the increase in plinth area.

* இது 10000 சதுர அடி பரப்பளவு கொண்ட அடித்தளத்திற்கான அடிப்படை வீதமாகும். 10000 சதுர அடிக்கு மேல் உள்ள அடித்தளப் பகுதிக்கான வைப்புத்தொகை அடித்தளப் பரப்பளவு அதிகரிப்பிற்கு ஏற்ப அதிகரிக்கப்படும்.

Table-2: Water Consumption Charges குடிநீர் நுகர்வு கட்டணம்

Plinth Area of Assessment in Sq.ft மதிப்பீடு செய்ய வேண்டிய அடித்தளப் பரப்பளவு	Water Consumption Charges (Rs./month/connection) குடிநீர் பயன்பாடு கட்டணம் (ரூ./இணைப்பில்)							
	Upto 16000 L in all Corporations and UGSS Ulbs அனைத்து மாநகராட்சிகளிலும் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படும் மாநகராட்சிகளிலும் 16000 லிட்டர் வரை				for every additional 1000 L கூடுதலாகும் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும்			
	Domestic குடியிருப்புகள்	Non-Domestic வணிகம்	Industrial தொழிற்சாலை	Educational /Institution/ Government Offices/Others கல்விநிறுவனங்கள்/ அரசு அலுவகங்கள்/ மற்றவைகள்	Domestic குடியிருப்புகள்	Non-Domestic வணிகம்	Industrial தொழிற்சாலை	Educational /Institution/ Government Offices/Others கல்விநிறுவனங்கள்/ அரசு அலுவகங்கள்/ மற்றவைகள்
Municipal Corporation								
<=600	120	360	360	360	18	54	54	54
601-1200	150	450	450	450	22	66	66	66
1201-1800	180	540	540	540	27	81	81	81
1801-3500	210	630	630	630	32	96	96	96
3501-5000	250	750	750	750	44	132	132	132
5001-10000	280	840	840	840	50	150	150	150
Above10000	300	900	900	900	55	165	165	165

This is the base rate for the plinth area of 10000 sq.ft. The Water Consumption Charges for the plinth area above 10000 sq.ft. shall be increased in proportion to the increase in plinth area.

	· இது 10000 சதுர அடி பரப்பளவு கொண்ட அடித்தளத்திற்கான அடிப்படை வீதமாகும். 10000 சதுர அடிக்கு மேல் உள்ள அடித்தளப் பகுதிக்கான நுகர்வு கட்டணம் அடித்தளப் பரப்பளவு அதிகரிப்பிற்கு ஏற்ப அதிகரிக்கப்படும்
(2) The water supply service connection deposit and water consumption charges shall be increased at the rate of **3% on every year**, so as cover the cost of operation and maintenance of the entire water supply system.	(2). குடிநீர் வழங்கல் சேவை இணைப்பு வைப்புத்தொகை மற்றும் குடிநீர் நுகர்வு கட்டணங்கள் ஒவ்வொரு ஆண்டும் 3 சதவீதத்தில் அதிகரிக்கப்பட வேண்டும், இதனால் முழு குடிநீர் வழங்கல் அமைப்பின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு செலவை ஈடுகட்ட முடியும்
(3) The owner/occupant, who have already availed the House service connection, shall also liable to pay the remaining amount of deposit for water supply service connection to the extent of the present rate of such Deposit	(3). வீட்டு சேவை இணைப்பை ஏற்கனவே பெற்ற உரிமையாளர்/குடியிருப்பாளர், குடிநீர் வழங்கல் சேவை இணைப்பிற்கான மீதமுள்ள வைப்புத் தொகையை தற்போதைய வைப்புத்தொகை விகிதத்தின் அளவிற்கு செலுத்த வேண்டியிருக்கும்.
15.(1) For the water distribution through private Lorries, through public association, the water charges shall be decided by **the Erode City Municipal Corporation** based on the Quantum of Water required and distance of Supply.	15 (1) தனியார் லாரிகள் மூலம், பொது நலச் சங்கங்கள் மூலம் குடிநீர் விநியோகிப்பதற்கு, குடிநீர் கட்டணங்கள் மாநகராட்சியால் தேவைப்படும் நீரின் அளவு மற்றும் விநியோக தூரத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.
The Erode City **Municipal Corporation** has the right to revise the charges depending on the circumstances.	சூழ்நிலைகளைப் பொறுத்து கட்டணங்களை திருத்தியமைக்க மாநகராட்சிக்கு உரிமை உண்டு.
During emergency conditions, the distribution of water through Lorry shall be determined by the Commissioner.	அவசரகால சூழ்நிலைகளின் போது, லாரி மூலம் தண்ணீர் விநியோகம் ஆணையரால் தீர்மானிக்கப்படும்.
(2).Temporary water supply Connections:	(2). தற்காலிக குடிநீர் விநியோக இணைப்புகள்:
The Commissioner is authorized to give temporary water supply service connections to places like exhibition, circus, or religion-oriented functions, temporary public gathering etc. considering the estimation given by the Erode City Municipal Corporation City Engineer subject to the following conditions namely:	கண்காட்சி, சர்க்கஸ் அல்லது மதம் சார்ந்த விழாக்கள், தற்காலிக பொதுக் கூட்டம் போன்ற இடங்களுக்கு தற்காலிக குடிநீர் இணைப்பு வழங்க ஆணையாளருக்கு அதிகாரம் உள்ளது. இது மாநகராட்சி பொறியாளரால் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கிய மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்படும்.
(a) Minimum charges per month per connection shall be Rs. 1500/- up to 10 KL and Rs. 50/- for consumption of every additional KL beyond the 10 KL.	(அ) இணைப்புக்கு மாதத்திற்கு குறைந்தபட்ச கட்டணம் 10 KL வரை ரூ. 1500/- ஆகவும், 10 KL க்கு மேல் ஒவ்வொரு கூடுதல் KL நுகர்வுக்கும் ரூ. 50/- ஆகவும் இருக்கும்.

b)All temporary water service connections shall be treated as non-domestic. (c)Temporary water connections shall be given for a period of 90 days only	(ஆ)அனைத்து தற்காலிக குடிநீர் சேவை இணைப்புகளும் வீட்டு உபயோகமற்ற இணைப்புகளாக கருதப்படும். (இ) தற்காலிக குடிநீர் இணைப்புகள் 90 நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.
16.(1)The consumers shall remit the water consumption charges as per the demand raised either based on water meter readings or based on flat charges within 15 days of receipt of demand notice. Failure to remit the charges within the specified time will result in fine for the charges paid after the date fixed for such payment at one rupee for every hundred rupee up to charges to be paid for every month or less than a month. (2). Any losses arising out of non-payment of charges and subsequent disconnection of water supply services shall be borne by the owner/tenant of the buildings. (3). Upon disconnection of water supply, the charges shall be collected by following the same procedure for collection of property tax. (4). If the owner/tenant requests for reconnection, the Erode City Municipal Corporation shall levy the charges of Rs. 500/- for disconnection and Rs. 500/- for reconnection along with road repair/restoration charges as required and provide the service connection subject to the following conditions namely: (a) Any additional deposit raised by the Council for carrying out disconnection and reconnection should have been paid by the owner/tenant. (b). The entire arrears of water charges and property tax should have been paid by the owner/tenant	16.(1) நுகர்வோர் குடிநீர் மீட்டர் அளவீடுகள் அல்லது நிலையான கட்டணங்களின் அடிப்படையில் எழுப்பப்பட்ட குடிநீர் நுகர்வு கட்டணங்களை கோரிக்கை அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். முதல் ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது ஒரு மாதத்திற்கும் குறைவான காலத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் கட்டணங்களை செலுத்தத் தவறினால், அத்தகைய கட்டணத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குப் பிறகு செலுத்தப்பட்ட கட்டணங்களுக்கு ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் ஒரு ரூபாய் வீதம் அபராதம் விதிக்கப்படும். (2). கட்டணம் செலுத்தாததாலும், அதைத் தொடர்ந்து குடிநீர் வழங்கல் சேவைகள் துண்டிக்கப்பட்டதாலும் ஏற்படும் எந்தவொரு இழப்பும் கட்டிடங்களின் உரிமையாளர் / வாடகைதாரரால் ஏற்கப்படவேண்டும். (3). குடிநீர் வழங்கல் துண்டிக்கப் பட்டவுடன், சொத்து வரி வசூலிப்பதற்கான அதே நடைமுறையைப் பின்பற்றுவதன் மூலம் கட்டணங்கள் வசூலிக்கப்படும். (4). உரிமையாளர்/ வாடகைதாரர் மீண்டும் இணைப்பு கோரினால், சாலை பழுதுபார்ப்பு / மறுசீரமைப்பு கட்டணங்களுடன் சேர்த்து, துண்டிக்க ரூ. 500/- மற்றும் மீண்டும் இணைக்க ரூ. 500/- ஆகிய கட்டணங்களை மாநகராட்சி வசூலிக்கும், மேலும் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு சேவை இணைப்பை வழங்கும்: (அ) இணைப்பு துண்டிப்பு மற்றும் மறு இணைப்புக்காக மாமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட கூடுதல் வைப்புத் தொகையை உரிமையாளர்/ வாடகைதாரர் செலுத்தியிருக்க வேண்டும். (ஆ). குடிநீர் கட்டணம் மற்றும் சொத்து வரியின் முழு நிலுவைத் தொகையையும் உரிமையாளர்/ வாடகைதாரர்

	செலுத்தியிருக்க வேண்டும்.
17. (1). If case of no consumption of water, minimum charges shall be levied with no discount. The owner/tenant may temporarily get the connection disconnected by getting written permission from the Commissioner. For this period, no charges shall be levied. However, for disconnection and reconnection, charges of Rs. 500 each along with road repair charges as required, shall be levied. (2). If the owner/tenant wants to disconnect the water connection temporarily or permanently he/she can do so by remitting the disconnection charge of Rs.500/-with an advance period of 30 days.	17.(1). குடிநீர் நுகர்வு இல்லையென்றால், குறைந்தபட்ச கட்டணம் தள்ளுபடி இல்லாமல் வசூலிக்கப்படும் கட்டிட உரிமையாளர்/ வாடகைதாரர் ஆணையரிடம் எழுத்துப்பூர்வ அனுமதியைப் பெற்று தற்காலிகமாக இணைப்பைத் துண்டித்துக் கொள்ளலாம். துண்டிக்கப்படும் காலத்திற்கு, எந்தக் கட்டணமும் வசூலிக்கப்படாது. இருப்பினும், இணைப்புத் துண்டிப்பு மற்றும் மறு இணைப்பிற்கு, தேவைக்கேற்ப சாலை பழுதுபார்ப்பு கட்டணங்களுடன் தலா ரூ. 500 வீதம் கட்டணம் வசூலிக்கப்படும். (2). உரிமையாளர்/ வாடகைதாரர் தண்ணீர் இணைப்பைத் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ துண்டிக்க விரும்பினால், 30 நாட்கள் முன்பு முன்பணம் ரூ. 500/- செலுத்தி குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்து கொள்ளலாம்.
18.(1)The owner/tenant shall pay Rs. 250/- as meter checking charges, in case of repair in meter or issues in the meter reading within 30days of the meter reading taken by the Erode City Municipal Corporation authorities. (2) If such a complaint is not made within this period and without payment of the charges shall not be considered. (3).After inspection, if the meter/meter reading is found to be defective, the meter checking charges will be refunded and if the meter is found to be in a good working condition, the meter checking charges will be forfeited.	18.(1) மாநகராட்சி அதிகாரிகளால் மீட்டர் அளவு எடுக்கப்பட்ட 30 நாட்களுக்குள் மீட்டரில் பழுது ஏற்பட்டாலோ அல்லது மீட்டர் காண்பிக்கும் அளவில் சிக்கல்கள் ஏற்பட்டாலோ உரிமையாளர் / வாடகைதாரர் ரூ. 250/- மீட்டர் சரிபார்ப்பு கட்டணமாக செலுத்த வேண்டும். (2) இந்தக் காலத்திற்குள் அத்தகைய புகார் செய்யப்படாவிட்டாலும் மற்றும் கட்டணங்கள் செலுத்தப்படாவிட்டாலும் அது பரிசீலிக்கப்படமாட்டாது. (3). ஆய்வுக்குப் பிறகு, அளவுமானி பழுது / அளவு கணக்கீட்டில் குறைபாடுகள் கண்டறியப்பட்டால், மீட்டர் சரிபார்ப்புக் கட்டணங்கள் திரும்ப வழங்கப்படும், மேலும் அளவுமானி நல்ல நிலையில் இருப்பது கண்டறியப்பட்டால், அளவுமானி சரிபார்ப்புக் கட்டணங்கள் திருப்பிதரபடமாட்டாது..
19.(1) If the meter is defective for more than one month or if the meter is found to be not showing the proper reading, the consumption charges shall be calculated based on the consumption during the same month in the previous year. The consumption charges thus calculated by the City Engineer or his/her representatives shall be final. (2) Minimum charges shall be levied if the house is	19.(1) மீட்டர் ஒரு மாதத்திற்கும் மேலாக பழுதடைந்திருந்தால் அல்லது மீட்டர் சரியான அளவீட்டைக் காட்டவில்லை எனக் கண்டறியப்பட்டால், முந்தைய ஆண்டின் அதே மாதத்தில் நுகர்வு அடிப்படையில் நுகர்வுக் கட்டணங்கள் கணக்கிடப்படும். மாநகரப் பொறியாளர் அல்லது அவரது பிரதிநிதிகளால் இவ்வாறு கணக்கிடப்பட்ட நுகர்வுக் கட்டணங்கள் இறுதியானவை.

locked, and the meter reading is not taken. If the meter reading is taken later and if the water charge is worked out to be more than the minimum charges already remitted, the difference in amount shall be levied along with the subsequent bill amount. (3) The City Municipal Corporation shall levy the minimum charges even if the house is found to be locked for more than two readings. If the owner/tenant fails to remit the minimum water charges thus levied by the Municipal Corporation, then the connection will be disconnected by the Municipal Corporation authority, subsequently the tenant/ owner shall avail water connection by remitting the reconnection charges, disconnection charges along the pending water charges without any due.	(2) வீடு பூட்டப்பட்டிருந்தால், மீட்டர் அளவீடு எடுக்கப்பட இயலாதபட்சத்தில் குறைந்தபட்ச கட்டணங்கள் விதிக்கப்படும். மீட்டர் அளவீடு பின்னர் எடுக்கப்பட்டபின் ஏற்கனவே செலுத்தப்பட்ட குறைந்தபட்ச கட்டணங்களை விட குடிநீர் கட்டணம் அதிகமாக இருந்தால், தொகையில் உள்ள வித்தியாசம் அடுத்தடுத்த பட்டியல் தொகையுடன் சேர்த்து வசூலிக்கப்படும். (3) இரண்டு முறைக்கு மேல் மீட்டர் அளவீடு எடுக்க இயலாமல் வீடு பூட்டப்பட்டிருப்பது கண்டறியப்பட்டாலும், மாநகராட்சி குறைந்தபட்ச கட்டணங்களை வசூலிக்கும். உரிமையாளர் / வாடகைதாரர் மாநகராட்சியால் விதிக்கப்படும் குறைந்தபட்ச குடிநீர் கட்டணங்களை செலுத்தத் தவறினால், மாநகராட்சி அதிகாரியால் இணைப்பு துண்டிக்கப்படும், பின்னர் வாடகைதாரர் / உரிமையாளர் மறு இணைப்பு கட்டணங்கள், துண்டிப்பு கட்டணங்கள் மற்றும் நிலுவையில் உள்ள குடிநீர் கட்டணங்களை எந்தக் கட்டணமும் நிலுவை இல்லாமல் செலுத்தி குடிநீர் இணைப்பைப் பெற வேண்டும்.
20. On inspection by the authorities , if the joints and taps are found to be in a damaged condition, the owner/tenant shall be given notice for repairing the damages. If the damage is not repaired immediately responding the notice then, the Municipal Corporation shall cause action to repair the damage and all costs so incurred for the repair shall be collected from the owner/tenant along with the water charges of the subsequent month.	20. அதிகாரிகள் ஆய்வு செய்யும்போது, இணைப்புகள் மற்றும் குழாய்கள் சேதமடைந்த நிலையில் இருப்பது கண்டறியப்பட்டால், உரிமையாளர்/ வாடகைதாரருக்கு சேதங்களை சரிசெய்ய நோட்டீஸ் அனுப்பப்படும். சேதம் உடனடியாக சரிசெய்யப்படாவிட்டால், மாநகராட்சியால் சேதத்தை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் பழுதுபார்த்ததற்காக ஏற்படும் அனைத்து செலவுகளும் உரிமையாளர்/ வாடகைதாரரிடமிருந்து அடுத்த மாதத்திற்கான குடிநீர் கட்டணத்துடன் வசூலிக்கப்படும்.
21. If the owner/tenant is found to use the water obtained from domestic connection for non-domestic purposes without the concern of the concerned authorities, then the owner / tenant shall be required to remit the charges as per the non-domestic rates from that month onwards. If the tenants/ owner want to change the non	21. வீட்டு இணைப்பிலிருந்து பெறப்பட்ட குடிநீர் உரிமையாளர்/ வாடகைதாரர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி வீட்டு உபயோகமற்ற நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவது கண்டறியப்பட்டால், அந்த மாதத்திலிருந்து வீட்டு உபயோகமற்ற விகிதங்களின்படி உரிமையாளர்/ வாடகைதாரர் கட்டணங்களை செலுத்த வேண்டும்.

domestic connection by giving application to Municipal Corporation, then connection will be changed as domestic connection by levying fine amount of Rs. 2000/- . This fine amount will be raised as demand along with the subsequent monthly bill.	வாடகைதாரர் /உரிமையாளர் மாநகராட்சி விண்ணப்பம் செய்து வீட்டு உபயோகமற்ற இணைப்பை மாற்ற விரும்பினால், ரூ. 2000/- அபராத தொகை விதித்து இணைப்பு வீட்டு உபயோக இணைப்பாக மாற்றப்படும். இந்த அபராதத் தொகை அடுத்தடுத்த மாதாந்திர பட்டியலுடன் சேர்த்து உயர்த்தப்படும்.
22.If any water supply service connection is found to be provided by the owner/tenant on their own without obtaining permission from the Municipal Corporation , then the connection will be treated as un-authorized connection and shall be regularized as regular water supply connection by following the procedure along with a fine amount as below. a. For domestic connection Rs. 10,000/- b. For non-domestic connection Rs. 20,000/-	22. மாநகராட்சியிடமிருந்து அனுமதி பெறாமல் உரிமையாளர் / வாடகைதாரர் தாங்களாகவே ஏதேனும் குடிநீர் விநியோக சேவை இணைப்பை வழங்கியது கண்டறியப்பட்டால், அந்த இணைப்பு அங்கீகரிக்கப்படாத இணைப்பாகக் கருதப்படும், மேலும் கீழே உள்ள நடைமுறையைப் பின்பற்றி அபராதத் தொகையுடன் வழக்கமான குடிநீர் விநியோக இணைப்பாக முறைப்படுத்தப் படும். a. வீட்டு இணைப்புக்கு ரூ. 10,000/- b. வீட்டு இணைப்பு அல்லாத இணைப்புக்கு ரூ. 20,000/-
23. Where water supply connections required to be provided for common toilets, urinary places and latrines, a tank shall be constructed with the necessary equipment for storage and supply of water in the location as decided by the City Engineer and connection can be provided.	23. பொதுவான கழிப்பறைகள், சிறுநீர் கழிப்பிடங்கள் மற்றும் கழிவறைகளுக்கு குடிநீர் வழங்கல் இணைப்புகள் வழங்க வேண்டிய இடங்களில், மாநகரப் பொறியாளரால் தீர்மானிக்கப்பட்ட இடத்தில் குடிநீர் சேமிப்பு மற்றும் விநியோகத்திற்குத் தேவையான உபகரணங்களுடன் ஒரு தொட்டி கட்டப்பட்டபின் இணைப்பு வழங்கபடும்.
24. If a water supply connection required to be provided for boiler plants, water shall be stored in a separate tank and utilized only from that tank. It shall be ensured that the tank shall be provided with ball valves and other appurtenances including alarms in a visible location for easy inspection.	24. பாய்லர் ஆலைகளுக்கு குடிநீர் வழங்கல் இணைப்பு வழங்க வேண்டியிருந்தால், தண்ணீரை ஒரு தனி தொட்டியில் சேமித்து, அந்த தொட்டியிலிருந்து மட்டுமே பயன்படுத்த வேண்டும். தொட்டியில் குழாய் திறப்பான் மற்றும் எச்சரிக்கை உள்ளிட்ட பிற சாதனங்கள் எளிதாக ஆய்வு செய்வதற்காக தெரியும் இடத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
25. Temporary connections for occasions like marriages or any other occasions may be provided with the approval of the Commissioner on receipt of application in Form 3 along with charges of Rs. 2000/- per day per connection for supply of water up to 20 KL. Necessary pipelines, fittings and other accessories required for providing temporary connection shall be arranged by the applicants at	25. திருமணம் அல்லது வேறு ஏதேனும் சந்தர்ப்பங்களுக்கான தற்காலிக இணைப்புகளை, 20 KL வரை குடிநீர் வழங்குவதற்கு, ஒரு இணைப்புக்கு ஒரு நாளைக்கு ரூ. 2000/- கட்டணத்துடன், படிவம் 3 இல் விண்ணப்பம் பெறப்பட்டவுடன், ஆணையரின் ஒப்புதலுடன் வழங்கலாம். தற்காலிக இணைப்பை வழங்குவதற்குத் தேவையான குழாய்கள், பொருத்துதல்கள் பிற பாகங்கள் மற்றும் சாலை

their own cost including restoration of road surface to its original condition. No temporary connection will be provided for a period of more than 5 days.	பழுதுபார்க்கும் பணியையும் விண்ணப்பதாரர்களால் தங்கள் சொந்த செலவில் செய்யப்பட வேண்டும், 5 நாட்களுக்கு மேல் தற்காலிக இணைப்பு வழங்கப்படாது.
26. The Erode City Municipal Corporation shall maintain a register for the purpose of water supply connection including the house service register meter, meter reading ledger and card therefore in Form 4	26. ஈரோடு மாநகராட்சி குடிநீர் வழங்கல் இணைப்பு நோக்கத்திற்காக படிவம் 4ல் உள்ளவாறு வீட்டு சேவை பதிவேடு, அளவுமானி பதிவேடு மற்றும் அட்டை உள்ளிட்ட பதிவேடுகளை பராமரிக்க வேண்டும்,
27. The Erode City Municipal Corporation AE/JE shall check not less than five percent of the meter readings recorded by the meter reader in a year and the Municipal Corporation Engineer shall check not less than twenty four meter readings in a year recorded by the meter recorder. The Accountant shall check not less than twenty five percent of the bills section, check and initial the bills so checked.	27. மாநகராட்சி AE/JE ஒரு வருடத்தில் மீட்டர் ரீடரால் பதிவுசெய்யப்பட்ட மீட்டர் அளவீடுகளில் ஐந்து சதவீதத்திற்கு குறையாமல் சரிபார்க்க வேண்டும், மேலும் மாநகராட்சி பொறியாளர் மீட்டர் ரீடரால் பதிவு செய்யப்பட்ட ஒரு வருடத்தில் இருபத்தி நான்கு மீட்டர் அளவீடுகளுக்கு குறையாமல் சரிபார்க்க வேண்டும். கணக்காளர் பில்களின் பிரிவில் இருபத்தைந்து சதவீதத்திற்கு குறையாமல் சரிபார்த்து, அவ்வாறு சரிபார்க்கப்பட்ட பில்களை சரிபார்த்து, கையொப்பம் இடவேண்டும்.
28. All house connections whether within or outside the premises attached with the Municipal Corporation water supply mains shall be under the control of the Municipal Corporation but shall be altered, repaired and kept in proper order at the expense of the owner of the premises to whom they belong or for the use of which they were constructed.	28. மாநகராட்சி குடிநீர் வழங்கல் குழாய்களுடன் இணைக்கப்பட்ட வளாகத்திற்குள் அல்லது வெளியே உள்ள அனைத்து வீட்டு இணைப்புகளும் மாநகராட்சி கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும், ஆனால் அவை சொந்தமான அல்லது அவை கட்டப்பட்ட பயன்பாட்டிற்காக வளாகத்தின் உரிமையாளரின் செலவில் மாற்றப்பட்டு, பழுதுபார்க்கப்பட்டு, சரியான வரிசையில் வைக்கப்பட வேண்டும்.
29.(1)The owner/tenant shall not attempt to break the seal or lock or the glass part of the water meter or try to open the meter or alter its contents or try to obstruct the measurement path of the water meter. 2)The owner/tenant shall not tap water before it is passing through the water meter.	29.(1) உரிமையாளர்/ வாடகைதாரர் குடிநீர் மீட்டரின் சீல் அல்லது பூட்டின் கண்ணாடிப் பகுதியை உடைக்க முயற்சிக்கவோ அல்லது மீட்டரைத் திறக்கவோ அல்லது அதன் உள்ளடக்கங்களை மாற்றவோ அல்லது குடிநீர் மீட்டரின் அளவீட்டுப் பாதையைத் தடுக்கவோ முயற்சிக்கக் கூடாது. (2) குடிநீர் மீட்டரைக் கடந்து செல்வதற்கு முன்பு உரிமையாளர் / வாடகைதாரர் குடிநீரை எடுக்கக்கூடாது.
30. (1).The procedure for providing water connections followed earlier until the above rules are notified shall be null and void. (2)The owner/tenant while submitting application	30. (1). மேற்கண்ட விதிகள் அறிவிக்கப்பட்டபின் முன்னர் பின்பற்றப்பட்ட குடிநீர் இணைப்புகளை வழங்குவதற்கான நடைமுறை செல்லாது. (2) புதிய குடிநீர் விநியோக இணைப்பு பெறுவதற்கான

for taking new water supply connection shall pay all the taxes to the Erode City Municipal Corporation and enclose the copies of receipts.	விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது உரிமையாளர்/ வாடகைதாரர் அனைத்து வரிகளையும் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும் மற்றும் ரசீதுகளின் நகல்களை இணைக்க வேண்டும்.
31. If the Erode City Municipal Corporation notices that water taps are damaged willfully or water connection is misused by the owner/tenant even after giving 24 hours warning notice, the connection shall immediately be disconnected. The Municipal Corporation will not be responsible for any losses to the owner/tenant on account of such disconnection.	31. ஈரோடு மாநகராட்சி, குடிநீர் குழாய்கள் வேண்டுமென்றே சேதமடைந்ததாகவோ அல்லது உரிமையாளர்/ வாடகைதாரர் 24 மணிநேர எச்சரிக்கை அறிவிப்பு கொடுத்த பிறகும் குடிநீர் இணைப்பை தவறாகப் பயன்படுத்துவதாகவோ அறியவந்தால், இணைப்பு உடனடியாக துண்டிக்கப்படும். அத்தகைய துண்டிப்பால் உரிமையாளர்/ வாடகைதாரருக்கு ஏற்படும் எந்தவொரு இழப்புக்கும் மாநகராட்சி பொறுப்பேற்காது.
32. Any person causing damage to the Erode City Municipal Corporation property shall be liable for punishment in the following manner. Fine shall be levied up to Rs.500/- initially and if the offence continues despite giving warning notice, running penalty of Rs.100/- per day shall be levied. If the offence continues, water service connection will be disconnected, and legal proceedings will be initiated through the Court of Law.	32. மாநகராட்சி சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் எந்தவொரு நபரும் பின்வரும் முறையில் தண்டனைக்கு ஆளாக நேரிடும். ஆரம்பத்தில் ரூ.500/- வரை அபராதம் விதிக்கப்படும், மேலும் எச்சரிக்கை அறிவிப்பு கொடுத்த பிறகும் குற்றம் தொடர்ந்தால், ஒரு நாளைக்கு ரூ.100/- வீதம் அபராதம் விதிக்கப்படும். குற்றம் தொடர்ந்தால், குடிநீர் சேவை இணைப்பு துண்டிக்கப்படும், மேலும் நீதிமன்றத்தின் மூலம் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
33.(1) The Erode City Municipal Corporation shall provide individual water service connections to all the people living below poverty line and shall avoid supply of drinking water through Lorries / HDPE tanks / Public Fountains for day-to-day consumption by the people. However, if it is not technically feasible to provide individual house service connections to households in any particular area, then water can be supplied either through Lorries or HDPE tanks or through Public Fountains after the Resolution by the Council and upon approval by the Chief Engineer, Directorate of Municipal Administration, Chennai.	33(1) வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் அனைத்து மக்களுக்கும் மாநகராட்சி தனிப்பட்ட குடிநீர் சேவை இணைப்புகளை வழங்கும். மேலும் மக்களின் அன்றாட நுகர்வுக்காக லாரிகள் / HDPE தொட்டிகள்/ பொது குழாய்கள் மூலம் குடிநீர் வழங்குவதை தவிர்க்க வேண்டும். இருப்பினும், எந்தவொரு குறிப்பிட்ட பகுதியிலும் உள்ள வீடுகளுக்கு தனிப்பட்ட வீட்டு சேவை இணைப்புகளை வழங்குவது தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமில்லை என்றால், மாமன்றத்தின் தீர்மானத்திற்குப் பிறகும், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் தலைமைப் பொறியாளரின் ஒப்புதலின் பேரிலும் லாரிகள் அல்லது HDPE தொட்டிகள் அல்லது பொது குழாய்கள் மூலம் குடிநீர் வழங்க முடியும்
33 (2) No person shall take water in containers of capacity more than 30 liters from the taps (a) Water shall be used only for domestic purposes except for emergencies due to fire accidents.	33 (2) யாரும் குழாய்களில் இருந்து 30 லிட்டருக்கு மேல் கொள்ளளவு கொண்ட கொள்கலன்களில் குடிநீர் எடுக்கக் கூடாது (அ) தீ விபத்துகள் காரணமாக ஏற்படும்

(b) No person shall be allowed to take baths or wash clothes or clean cattle or clean vehicles from the public water taps. (c)When other people are waiting, no person shall take water more than once from the public taps.	அவசரநிலைகளைத் தவிர, வீட்டு உபயோகங்களுக்கு மட்டுமே குடிநீர் பயன்படுத்த வேண்டும். (ஆ) பொது குடிநீர் குழாய்களில் யாரும் குளிக்கவோ, துணிகளைக் துவைக்கவோ, கால்நடைகளை சுத்தம் செய்யவோ அல்லது இருந்து வாகனங்களை சுத்தம் செய்யவோ அனுமதி கிடையாது. (இ) மற்றவர்கள் காத்திருக்கும் போது, பொது குடிநீர் குழாய்களில் இருந்து யாரும் ஒன்றுக்கு மேற்பட்ட முறை குடிநீர் எடுக்கக்கூடாது.
(3) In addition to the installation of public fountains fixed at the time of formulation of the water supply scheme, no new public fountains except in areas where people belonging to economically weaker sections reside shall be installed. The number of public fountains in such area shall be provided at the ratio of 50 percentage residential buildings which have no house connection of water supply.	(3) குடிநீர் வழங்கல் திட்டத்தை உருவாக்கும் பொது குடிநீர் குழாய் பொருளாதார ரீதியாக பலவீனமான பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் வசிக்கும் பகுதிகளைத் தவிர வேறு எங்கேயும் நிறுவக் கூடாது. அத்தகைய பகுதியில் பொது குழாய் நிறுவும் போது உள்ள பொது குழாய்களின் எண்ணிக்கை, வீட்டு குடிநீர் இணைப்பு இல்லாத 50 சதவீத குடியிருப்பு கட்டிடங்களின் விகிதத்தில் வழங்கப்பட வேண்டும்.
(4) Wherever economically weaker sections reside, the commissioner may decide whether the existing public fountain may be maintained or the same may be converted into bulk water supply with charges collected from the beneficiaries of such area, but assessing a "NIL" property tax in the name of Community Based organization (CBO).	(4) பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவினர் வசிக்கும் இடங்களில், தற்போதுள்ள பொது குழாயினை பராமரிக்கலாமா அல்லது அதைப் பெருமளவு குடிநீர் விநியோகமாக மாற்றலாமா என்பதை ஆணையர் முடிவு செய்யலாம். சமூக அடிப்படையிலான அமைப்பின் (CBO) பெயரில் "NIL" சொத்து வரியை நிர்ணயித்து அந்தப் பகுதியின் பயனாளிகளிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்படும்
(5) No person shall cause wastage of water provided by the Erode City Municipal Corporation by the misuse of public stand-posts or pipes, drinking fountains of hydrants.	(5) பொது நிறுத்துமிடங்கள் அல்லது குழாய்கள், நீர்த்தேக்கங்களின் குடிநீர் நீரூற்றுகள் ஆகியவற்றை தவறாகப் பயன்படுத்துவதன் மூலம் மாநகராட்சியால் வழங்கப்படும் தண்ணீரை வீணாக்குவதற்கு எந்தவொரு நபரும் காரணமாக இருக்கக்கூடாது.

மேற்படி, துணைவிதிகள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாநகராட்சி, நகராட்சிகளுக்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஒப்புதலுடன் ஏற்படுத்தப்பட்ட குழுவால் பொதுவானதாக இயற்றப்பட்டவை,

எனவே, மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

இப்பொருள் 29.07.2026 ஆம் தேதிய மாமன்ற சாதாரண கூட்டத்தில் ஒத்தி வைக்கப்பட்டது. மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் மீள வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு.

மாமன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.. இ2/2462 /2025(மையம்)

499.) ஒத்தி வைக்கப்பட்டது

2) திரு. S. Sakthivel	(-) 16.00 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு
3) திருவாளர்கள். ARK Construction	(-) 11.26 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு
4) திருவாளர்கள். Yes Pee Associates	(-) 10.26 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு
5) திருவாளர்கள். Vetri Construction	(-) 2.45 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு
6) திருவாளர்கள். S.V & Co	(+) 0.70% சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம்

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித்தொகையை ஒப்பந்ததாரர்கள் இணையதள வாயிலாக செலுத்தியுள்ளனர். எனவே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)20.00% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள். Semmai Infra நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு. எண். சி6/6048/2026. (ம-2)

526.) அனுமதிக்கப்பட்டது

30.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2க்குட்பட்ட வார்டு. எண்.35-ல் உள்ள மத்திய பேருந்து நிலையத்திற்கு கூடுதல் அபிவிருத்தி மேற்கொள்ளும் பணிக்கு பொது நிதி 2026-27-ன் கீழ் ரூ.9.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு E-Tendering முறையில் 11.08.2026 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் போது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு,

1) திருவாளர்கள். Thulir Infra Developers Private Limited	(-) 15.57 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு
2) திருவாளர்கள். Lavanya Electricals	(-) 2.04 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு
3) திருவாளர்கள். Green Enviro Systems	(+) 0.82 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம்

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித்தொகையை ஒப்பந்ததாரர்கள் இணையதள வாயிலாக செலுத்தியுள்ளனர். எனவே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)15.57% குறைவான

விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள். Thulir Infra Developers Private Limited நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு. எண். இ1-1753-2026(ம-2).

527.) அனுமதிக்கப்பட்டது

31.) ஈரோடு மாநகராட்சி வரதநல்லூர் சுத்திகரிப்பு நிலையத்தில் குளோரின் சிலிண்டர்களை பாதுகாப்பாக இறக்கி வைக்க ஏதுவாக கான்கரீட் தளம் மற்றும் GI மேற்கூரை அமைத்தல் பணியினை குடிநீர் நிதி 2026-27-ன் கீழ் ரூ.23.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 25.02.2026 அன்று ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து, மேற்கண்ட பணிக்கு E-Tendering முறையில் 29.06.2026 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் நீர்வாக காரணத்தினால் 07.07.2026 அன்று வரை ஒத்திவைக்கப்பட்டு திறக்கப்பட்டதில் வரபெற்ற ஒப்பந்தபுள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் போது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு

1) திருவாளர்கள். Balaguru Infra	(-) 1.52 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு
2) திருவாளர்கள். Semmai Infra	(-) 0.65 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு
3) திரு. V.Dhamodharan	(+) 1.13 % சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம்

மேற்கண்ட பணிக்கு 1 சதவீதம் டேவணித்தொகையை ஒப்பந்ததாரர்கள் இணையதள வாயிலாக செலுத்தியுள்ளனர். எனவே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (-)1.52% குறைவான

விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள் .Balaguru Infra நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு. எண். இ1-1122-2026 (மையம்).

528.) அனுமதிக்கப்பட்டது

32.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட வார்டுஎண். 47 -இல் பாரதிபுரம் பகுதியில் அமைந்துள்ள 3,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஆழ்துளை குழாய் கிணறு மேல்நிலை தொட்டி மிகவும் சிதலமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. தற்போது இப்பகுதியில் உள்ள ஆழ்துளை குழாய் கிணறு செயல்படாமல் உள்ளது. மேலும், இப்பகுதியில் ஊராட்சிக் கோட்டை குடிநீர் திட்டத்தின் மூலம் சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பொது மக்களுக்கு மிகவும் ஆபத்து விளைவிக்க கூடியநிலையில் உள்ள மேல்நிலை தொட்டியினை அப்பகுதி பொதுமக்களின் நலன்கருதி உடனே இடித்து அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். இ1/ 3317 /2026 (ம-3)

529.) அனுமதிக்கப்பட்டது

33.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட வார்டுஎண். 19 -இல் வீரப்பம்பாளையம் பிரிவு பகுதியில் அமைந்துள்ள 20,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை தொட்டி கட்டி பல வருடங்கள்ஆனநிலையில் மிகவும்

சிதலமடைந்து இடிந்துவிழும் நிலையில் உள்ளது.தற்போது இப்பகுதியில் உள்ள ஊராட்சிக் கோட்டை குடிநீர் திட்டத்தின் மூலம் சீரான குடிநீர்வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பொது மக்களுக்கு மிகவும் ஆபத்து விளைவிக்க கூடிய நிலையில் உள்ள மேல்நிலை தொட்டியினை அப்பகுதி பொதுமக்களின் நலன் கருதி உடனே இடித்து அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணியின் அவசரஅவசியம் கருதி தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.20 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். இ1/3320 /2026 (ம-3)

530.) அனுமதிக்கப்பட்டது

34.) ஈரோடு மாநகராட்சி – மண்டலம்-2, 3, வார்டு எண்.9, பெரியசேமூர் கிராமம், , ரீ.சர்வே எண். 336/3 மற்றும் மண்டலம்-3, வார்டு எண்.49, ஈரோடு 'C' கிராமம், ரீ.ச.எண்.473/3-ல் – மாநகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தினை மத்திய அரசு நிறுவனமான BPCL-க்கு நிபந்தனைகளின் பேரில் மாத வாடகைக்கு ஒப்படைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

பொருள்:-

பார்வை:-

1. பாரத் பெட்ரோலியம் கார்பரேஷன் லிமிடெட் (BPCL) அவர்களின் கடிதம் எண். BPCL.GAS.TN1.26.Erode Corp/04 நாள். 11.05.2026
2. முதன்மை செயலாளர், TIDCO அவர்களின் கடிதம் எண்.D.O.Ref. TIDCO/CGD-PJ/Govt. lands/2026 நாள். 29.05.2026
3. இணை சார்பதிவாளர், அவர்களிடம் பெறப்பட்ட வழிகாட்டி மதிப்பீடு நாள்.10.06.2026

.....

ஈரோடு மாநகராட்சி, மண்டலம் – 2, வார்டு எண்.9 பெரியசேமூர் கிராமம், ரீ.சர்வே எண். 336/3 மற்றும் மண்டலம்-3, வார்டு எண்.49, ஈரோடு 'C' கிராமம், ரீ.ச.எண்.473/3-ல் பாரத் பெட்ரோலியம் நிறுவனம், பொதுமக்கள் உபயோகத்திற்கு எரிவாயு குழாய் பதித்து, (DPNG - Domestic Piped Natural Gas) இயற்கை எரிவாயு இணைப்புகள் வழங்கும் பொருட்டு DCU/DRS (District Compressor Unit/District Regulating Stations) அமைக்க மாத வாடகை அடிப்படையில் இடம் கோரப்பட்டுள்ளது.

பொறியியல் பிரிவு கணக்கீட்டின் படி (PWD Rate Calculation) ஈரோடு மாநகராட்சி, மண்டலம்-2, வார்டு எண்.9 பெரியசேமூர் கிராமம் ரீ.ச.எண்.336/3 தற்போது வார்டு E, பிளாக் 21, TS No.1-ல் பெரியசேமூர் பேரூராட்சிக்கு தானப்பத்திர எண்.263/1995, நாள்.06 .02.1995-ன் படி வழங்கப்பட்ட 4905.90 ச.மீட்டர் இடத்தில் 246.4 ச.மீ, மாத வாடகை தொகை.ரூ.30,000/-க்கும் மற்றும் மண்டலம்-3, வார்டு எண்.49, ஈரோடு 'C' கிராமம், ரீ.ச.எண்.473/3-ல். ஈரோடு மாநகராட்சிக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் தானமாக வழங்கப்பட்ட 15,194 சமீ இடத்தில் 246.4 ச.மீ, மாத வாடகை தொகை.ரூ.40,000/-க்கும், மேற்படி நிறுவனத்திற்கு 2026-2027 முதல் 15 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் கீழ்கண்ட நிபந்தனைகளின் படி வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

நிபந்தனைகள்:-

1. மேற்படி பணிகளை தங்களது சொந்த செலவில் மாநகராட்சி அதிகாரிகள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. பணி மேற்கொள்ளும்போது குடிநீர் குழாய்கள்/கிணற்றுநீர் குழாய்கள் ஏதாவது சேதாரம் ஏற்படுமானால் சொந்த செலவில் தரமான பொருட்கள் மூலம் சரிசெய்து கொடுக்க வேண்டும்.
3. பணிமேற்கொள்ளும்போது உரிய பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். விபத்துகள் ஏதும் நிகழாவண்ணம் பார்த்து கொள்ள வேண்டும்
4. நெடுஞ்சாலைத்துறை மற்றும் மின்சாரதுறை ஆகிய துறைகளின் அனுமதி பெற்று பணியை தொடங்க வேண்டும்

5. ஒரு வருட வாடகையினை முன் வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும்
6. தற்போது உள்ள விதிகளின்படி 15 ஆண்டுகள் கொண்ட தொகுப்பிற்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது
7. மேலும் ஒவ்வொரு மூன்று ஆண்டுகள் முடிவிலும் 15% வாடகை உயர்வு செய்யப்படும்
8. 15 ஆண்டுகள் முடிவில் மாநகராட்சியால் மறு நிர்ணயம் செய்யப்படும் வாடகையினை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் அடுத்த 15 ஆண்டுகள் தொகுப்பிற்கு உரிமம் புதுப்பிக்கப்படும்.
9. மாநகராட்சிக்கு தேவைப்படும் நேர்வில் இடத்தினை திரும்ப ஒப்படைக்க வேண்டும் மாமன்றத்தின் அனுமதி சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்: இ2/2674 /2026 (மையம்)

531.) அனுமதிக்கப்பட்டது

35.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட வார்டு எண்.33 இல் உள்ள அவ்வையார் வீதியில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை குழாய் கிணற்றில் மின்மோட்டாரில் மின்அழுத்தம் காரணமாக கேபிள் பழுதடைந்து மக்களுக்கு குடிநீர் வழங்குபவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. மின்மோட்டார் பழுது சரிசெய்து புதியதாக கேபிள் அமைத்து பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்க வேண்டியுள்ளது. எனவே குடிநீர்பணி என்பதால் பணியினை விரைந்து முடிப்பது அவசியமாகிறது. எனவே இப்பணியின் அவசர அவசியத்தைக் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகளின் சட்டம் 1998-ன் 57(7)வது பிரிவின் கீழ் இப்பணியை ரூ.1.95 இலட்சம் செலவில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர்.A. Selvaraj. Erode ஒப்பந்ததாரர் அவர்களின் விலைப்புள்ளி ரூ.1,86,637/-

ஏற்று பணி முடிக்கப்பட்டு தொகை வழங்கிய விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மன்றம் பார்வைட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்: இ1/ /2025 (ம-3)

532.) பதிவு செய்யப்பட்டது.

36.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3 எல்லைக்குட்பட்ட வார்டு எண்.49 வள்ளியம்மை வீதியில் உள்ள மேல்நிலைத்தொட்டி பழுதடைந்தும் மற்றும் ஸ்ரீநகர் பகுதியில் மழைநீர் மற்றும் பாசனத்திற்கான உபரிநீர் வெளியேற வழியில்லாமல் சாலை மற்றும் பொது மக்களின் வீடுகளில் புகுந்து அப்பகுதி மக்களுக்கு சுகாதாரகேடு விளைவிக்கும் வண்ணம் உள்ளது. எனவே மேற்படி மேல்நிலைத்தொட்டியின் பழுதுகளை சீர்செய்து அப்பகுதியில் உள்ள மழைநீர் வெளியேற்ற சாலைகளில் சிமெண்ட் குழாய்கள் அமைத்து மழைநீர் மற்றும் கழிவுநீரை வெறியேற்ற வேண்டிஉத்தேசிக்கப்பட்டது. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன்கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய M/s United Engineers.Erode அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணி செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,09,149/. M/s United Engineers. Erode அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.இ1/1341./2022 (ம-3)

533.) பதிவு செய்யப்பட்டது

37.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3 எல்லைக்குட்பட்ட வீரப்பம்பாளையம் மாநகராட்சி தொடக்கப்பள்ளி வார்டு அலுவலகம், வில்லரசம்பட்டி வார்டு அலுவலகம்

மற்றும் திண்டல் வார்டு அலுவலகத்திற்கு அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் பயன்பாட்டிற்கு போதுமான நாற்காலிகள் இல்லை. எனவே மேற்படி வார்டு அலுவலகங்களுக்கு நாற்காலி மற்றும் மேசைகள் வாங்க வேண்டியும் மற்றும் மாநகராட்சி எல்லை முடிவில் பெயர் பலகை வைக்கவும் உத்தேசிக்கப்பட்டது. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன்கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய M/s United Engineers. Erode அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணி செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,33,623/ஐ M/s United Engineers. Erode அவர்களக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலம்,

கோப்பு எண்.இ1/1340./2022 (ம-3)

534.) பதிவு செய்யப்பட்டது

38.) ஈரோடு மாநகராட்சியில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் (Added Area) சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் 67.78km நீளத்திற்கு அமைக்கப்பட்ட பாதாள சாக்கடை திட்ட கழிவுநீர் குழாய்கள் உள்ள இயந்திரகுழிகள், கழிவுநீர் உந்து நிலையங்கள், உபகழிவுநீர் நீரேற்று நிலையங்கள் மற்றும் பிரதான கழிவுநீர் நீரேற்று நிலையம் உள்ளிட்ட கட்டமைப்புகளை இயக்கி பராமரிக்கும் பணிக்கு ரூ.24.70 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள E-Tendering முறையில் இரு உறை அமைப்பில் 08.07.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பின்னர் நிர்வாக காரணங்களால் ஒப்பந்தப்புள்ளி ஒத்திவைக்கப்பட்டு 28.07.2026 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

1. திருவாளர்.VNV Builders Pvt Ltd., Gobichettipalayam
2. திரு.P.Muthusamy, Salem

3. திருவாளர்.Kalaichandrar & Co.,
4. திருவாளர். S.N.Dhathrikash Infra Projects
5. திருவாளர். R.K. Enviro Care
6. திருவாளர். King Construction

மேற்கண்டவாறு வரப்பெற்ற அனைத்து ஒப்பந்ததாரர்களும் மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித் தொகையை இணையதள வாயிலாக செலுத்தியுள்ளனர். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் Technical bid-களை 11.08.2026 அன்று தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. அதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் தொழில்நுட்ப தகுதிகளுக்கான நிபந்தனைகளை G+ர்த்தி செய்து தகுதி வாய்ந்ததாக உள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

1. திருவாளர்.VNV Builders Pvt Ltd., Gobichettipalayam
2. திருவாளர். S.N.Dhathrikash Infra Projects

மேற்படி தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்படிவங்கள் (Price Bid) 12.08.2026 அன்று 11.30 மணியளவில் திறக்கப்பட்டதில், பெறப்பட்ட விலைவிகிதத்தை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு சேவைக்கட்டண விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் போது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு.

வ. எண்	அனுமதிக்கப்பட்டமதிப்பீட்டு சேவைக்கட்டணவிலை விகிதம்	திருவாளர்.VNV Builders Pvt Ltd., Gobichettipalayam	திருவாளர். S.N.Dhathrikash Infra Projects
1	5.00 சதவீதம்	4.45 சதவீதம்	4.89 சதவீதம்

எனவே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு சேவைக்கட்டண விலைவிகிதத்தைவிட குறைவான சேவைக்கட்டண விலைவிகிதம் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திருவாளர் .VNV Builders Pvt Ltd, Gobichettipalayam நிறுவனத்தாரரின் ஒப்பந்தப்புள்ளி சேவைக்கட்டண விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு :

1. அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்டபணியின்அவசர அவசியம் கருதி வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் குறைவானதாகவும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு சேவைக்கட்டண விலைவிகிதத்தை விட குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாண்புமிகுமேயர்அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்குமாமன்றம்அனுமதிவழங்கலாம்.

.கோப்பு எண்.இ2-/3316/2025 (மையம்)

535,) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

39.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1 மற்றும் மண்டலம் 2-க்குட்பட்ட பகுதிகளில் KfW மற்றும் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பாதாள சாக்கடை திட்ட பணியில் 259.60 கிலோமீட்டர் நீளமுள்ள சேகரிப்பு குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் வீடுகளுக்கு இணைப்பு வழங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. மண்டலம் 1 மற்றும் மண்டலம் 2-ல் சாலையோர கழிவு நீரூந்து நிலையம், (LS) 5 எண்ணிக்கை மூலமாகவும் உப கழிவுநீரேற்று நிலையம் (PS) 6 எண்ணிக்கை மூலமாகவும் சேகரம் செய்து பிரதான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது.

இந்த கழிவுநீர் சேகரிக்கப்படும் குழாய்கள் இயந்திரக் குழிகள் சாலையோர கழிவு நீரூந்து நிலையங்கள் உப கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் பிரதான கழிவு நீரேற்று நிலையம் உள்ளிட்ட பாதாள சாக்கடை திட்ட கட்டமைப்புகளை தினமும் இயக்கி பராமரிக்க போதிய பணியாளர்கள் தற்பொழுது மாநகராட்சியில் இல்லை.

எனவே வெளி கொணர்வு முகமை மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின் படி பணியாளர்களை ஒப்பந்த முறையில் அமர்த்திக் கொள்ள 01.04.2026 முதல் 15.06.2026 வரை (2 1/2 மாதங்களுக்கு) தயார் செய்யப்பட்ட ரூ.46.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி பணிக்கு வேலை உத்தரவு

வழங்கப்பட்டு 15.06.2026 உடன் முடிவடைந்துள்ளது. மேலும், 15.06.2026 முதல் 31.07.2026 வரை வேலை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இப்பணிக்கு 23.06.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதிகளுக்கான நிபந்தனைகளில் தெரிவித்துள்ளபடி தகுதி பெறவில்லை. எனவே, ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டு மறுஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மறுஒப்பந்தப்புள்ளி கோரி வேலை உத்திரவு வழங்கும் வரை பொது மக்களின் பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டு மேற்கண்ட பராமரிப்பு பணியினை மேலும் 75 நாட்கள் (அல்லது) 01.08.2026 முதல் 15.10.2026 வரை (2 1/2 மாதங்களுக்கு) தற்போது பாதாள சாக்கடைத் திட்ட O & M பணியினை மேற்கொண்டு வரும் M/S. VNV Builders - நிறுவனத்தின் மூலம் தற்போதுள்ள ஒப்பந்தம் மூலம் அதே விலை விகித்தில் ரூ.46.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்

கோப்பு எண்.இ2/1404/2026 (ம-1)

536,) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

40.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் 3 மற்றும் மண்டலம் 4-க்குட்பட்ட பகுதிகளில் KfW மற்றும் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பாதாள சாக்கடை திட்ட பணியில் 265.95 கிலோமீட்டர் நீளமுள்ள சேகரிப்பு குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது மேலும் வீடுகளுக்கு இணைப்பு வழங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது சிப்பம் III மற்றும் IV சாலையோர கழிவு நீரூந்து நிலையம், (LS) 6 எண்ணிக்கை மூலமாகவும் உப கழிவுநீரேற்று நிலையம் (PS) 5 எண்ணிக்கை மூலமாகவும் சேகரம் செய்து பிரதான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது.

இந்த கழிவுநீர் சேகரிக்கப்படும் குழாய்கள் இயந்திரக் குழிகள் சாலையோர கழிவு நீரூந்து நிலையங்கள் உப கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் பிரதான கழிவு நீரேற்று நிலையம் உள்ளிட்ட பாதாள சாக்கடை திட்ட கட்டமைப்புகளை தினமும் இயக்கி பராமரிக்க போதிய பணியாளர்கள் தற்பொழுது மாநகராட்சியில் இல்லை.

எனவே வெளி கொணர்வு முகமை மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின் படி பணியாளர்களை ஒப்பந்த முறையில் அமர்த்திக் கொள்ள 01.04.2026 முதல் 15.06.2026 வரை (2 1/2 மாதங்களுக்கு) தயார் செய்யப்பட்ட ரூ.49.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு 15.06.2026 உடன் முடிவடைந்துள்ளது. மேலும், 15.06.2026 முதல் 31.07.2026 வரை வேலை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இப்பணிக்கு 23.06.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதிகளுக்கான நிபந்தனைகளில் தெரிவித்துள்ளபடி தகுதி பெறவில்லை. எனவே, ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டு மறுஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மறுஒப்பந்தப்புள்ளி கோரி வேலை உத்திரவு வழங்கும் வரை பொது மக்களின் பொது சுகாதாரத்தை கருத்தில் கொண்டு மேற்கண்ட பராமரிப்பு பணியினை மேலும் 75 நாட்கள் (அல்லது) 01.08.2026 முதல் 15.10.2026 வரை (2 1/2 மாதங்களுக்கு) தற்போது பாதாள சாக்கடைத் திட்ட O & M பணியினை மேற்கொண்டு வரும் M/S. VNV Builders - நிறுவனத்தின் மூலம் தற்போதுள்ள ஒப்பந்தம் மூலம் அதே விலை விகித்தில் ரூ.49.80 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு :

1„ மாமன்றம் அனுமதி வழங்கலாம்

2 மேற்கண்ட பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்

கோப்பு எண். இ2/1405/2026 (ம-3)

537,) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

41.) ஈரோடு மாநகராட்சி பகுதிகளில் உள்ள கர்ப்பிணி பெண்களுக்கு மற்றும் பிரசவித்த தாய் சேய் ஆகியோரின் நலன் காக்கும் வகையில் நகர்ப்புற துணை சுகாதார செவிலியர்கள் 50 நபர்களுக்கும் மற்றும் இரண்டு மக்களை தேடி மருத்துவ குழுக்களுக்கும் தாய் சேய் நல பராமரிப்பு தொடர்பான 15 உபகரணங்கள் கொண்ட மருத்துவ பெட்டகம் வழங்க உத்தேசிக்கப்பட்டது. தாய் சேய் நல பராமரிப்பு கருதி மேற்படி பெட்டகங்களை உடனடியாக வழங்க வேண்டிய அவசர அவசியம் கருதி மேற்படி கொள்முதல் பணியை திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57(7)-ன்படி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த) சட்டம் 2022 பிரிவு 57(7) -ன் கீழ் பணிகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலை விகிதம் வழங்கியுள்ள M/s. MITH HEALTHCARE, ERODE நிறுவனத்தின் மூலம் விநியோகம் பெறப்பட்டு அதற்கான தொகை ரூ.5,03,984/- ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

கோப்பு.எண். எச்1/3127/2026 (மையம்)

538,) பதிவு செய்யப்பட்டது.

42.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-I பொது சுகாதாரப்பிரிவில் 36 இலகுரக வாகனங்கள் 10 கனரக வாகனங்கள் இயக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளை மேற்கொள்ளும் வாகனங்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஒவ்வொரு வருடமும் தகுதிச் சான்றிதழ், பிரதிபலிப்பு சான்றிதழ், மாசு கட்டுப்பாட்டுச் சான்றிதழ் மற்றும் சுற்றுச்சூழல் வரி பெறப்பட்டு வருகிறது. இச்சான்றிதழ் பெறுவதற்கு இலகுரக வாகனங்களுக்கு தோராயமாக ரூ.4,000/- கனரக வாகனங்களுக்கு ரூ.6,000/- கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்த கட்டணங்களை அங்கீகரிக்கப்பட்ட பணிமனைகள் செலுத்துவதற்கு

அனுமதி இல்லாததால், சொந்த செலவில் செலுத்திய பிறகு அலுவலகத்தில் இருந்து செலவு தொகையை மீளப் பெறுவதற்கு கால தாமதம் ஆகிறது. ஆகவே, இப்பணிகளை மேற்கொள்வதற்கு நிரந்தர முன்பணம் (Permanent Advance) ரூ.25,000/- ஐ முன்பணமாக பெற்று பணியினை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

அனுமதிக்கலாம்.

கோப்பு எண்: எச் 1/00914 / 2026(ம-1)

539,) அனுமதிக்கப்பட்டது

43.) ஈரோடு மாநகராட்சி, மண்டலம்-IV, வார்டு எண்-41 ஐயனாரப்பன் கோவில் வீதியில் அமைந்துள்ள பொது சுகாதாரப் பிரிவு அலுவலகக் கட்டிடத்தில் உள்ள இரும்பு அறையின் மேற்கூரை மற்றும் கழிப்பறைகள் பழுதடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. மேற்படி கட்டிடத்தின் பழுதடைந்த பகுதிகளை உடனடியாக சீரமைத்து, அலுவலகப் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுமாறு மதிப்பிற்குரிய ஆணையர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், பொது சுகாதாரப் பிரிவு அலுவலகக் கட்டிடத்தில் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள கழிப்பறைகளுக்கு புதிய PVC கதவுகள் பொருத்துதல், அலுவலக அறையில் மின்விளக்குகள் மற்றும் மின்விசிறி பொருத்துதல், இருப்பறையின் மேற்கூரை மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதீப்பீட்டுத்தொகை ரூ.3.62 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். இ1/ 1808 /2026 (ம-4)

540.) அனுமதிக்கப்பட்டது

44.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் -4 க்குட்பட்டவார்டுஎண் 40 கற்பகம்லேஅவுட், மோசிகீரனார்வீதி மற்றும் மாதவகிருஷ்ணா வீதிகளில் மழைநீர் வடிகால்கள் மற்றும் சிறுபாலங்கள் அமைத்து பல ஆண்டுகள் ஆனதாலும் பல்வேறு காலநிலை மாற்றத்தினாலும் மழைநீர் வடிகால்கள் மற்றும் சிறுபாலங்களின் சுவர்கள் சேதமடைந்து சரிந்து மழைநீர் வடிகால் நீர் செல்லும் பாதையில் விழுந்துள்ளது. இதனால் மழைநீர் மற்றும் கழிவுநீர் செல்லாமல் தேங்கி நின்று சுகாதாரசீர் கேடு மற்றும் நோய் தொற்று ஏற்படும் நிலை உள்ளது. மேலும் மழைநீர் வடிகால் சுவர் இல்லததால் தார்சாலையின் ஓரங்களில் உடைப்பு ஏற்பட்டு போக்குவரத்துக்கு இடையூராக உள்ளதுடன் விபத்து ஏற்படும் அபாயம் நிலவுகிறது. எனவே பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால் சுவர் மற்றும் சிறுபாலம் ஆகியவற்றை புதியதாக அமைக்க தயார்செய்யப்பட்ட மதிப்பீட்டுதொகைரூ.6.60 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்ற கூட்டபொருள் வரைவு ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/1809 /2026 (ம-4)

541.) அனுமதிக்கப்பட்டது

45.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட வார்டு எண்.44 இல் மீனவர்காலனி பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் டஉள்ளது. அப்பகுதி மக்களின் பாதுகாப்பு நலன் கருதி பழுதடைந்த நிலையில் உள்ள கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.12,000/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1./ 3132 /2026 (ம-3)

542.) அனுமதிக்கப்பட்டது

46.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1 வார்டு எண் 16-ல் செங்கோட்டை நகர் முதல் வீதி பொது மக்கள் உபயோகப்படுத்தும் பொதுவான தண்ணீர் உபயோகத்திற்கான 50HP Air Compressor உள்ளது. இதன் Air Compressor மின்மோட்டார் பேனல்போர்டு பழுதாகியுள்ளது. எனவே மேற்படி ஏர் சம்பரசரின் 5HP Capacity பேனல்போர்டு புதியதாக மாற்றி அமைக்க வேண்டும். வார்டு எண் 16 பட்டேல் வீதியில் உள்ள பொதுக்கழிப்பிடத்திற்கு தண்ணீர் உபயோகத்திற்காக ஏற்கனவே உள்ள ஆழ்துளைகிணற்றில் 5 HP திறன் கொண்ட Submersible Motor Pumpset மின்மோட்டார் அமைத்து தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேற்படி மின்மோட்டாரில் ஸ்டார்ட்டர் பழுதடைந்து மேற்படி மோட்டார் இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி தெருக்களில் வசக்கும் பொதுமக்கள் பொதுக்கழிப்பிட உயோகத்திற்காக தண்ணீர் இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். வார்டுஎண் 26 T.கிருஷ்ணன் வீதி (சென்னை பேக்கரி அருகில்) பொதுமக்களின் பொதுவான தண்ணீர் உபயோகத்திற்காக ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றில் 5 HP திறன் கொண்ட நீர்மூழ்கி மின்மோட்டார் அமைத்து தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி மின்மோட்டார் பழுதடைந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட பழுதுகளை பொதுமக்களின் தினசரி பொதுக்கழிப்பிட உபயோகம் மற்றும் பொதுவான தண்ணீர் உபயோகத்திற்கான நலன் கருதி உடனடியாக செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே மேற்கண்ட குடிநீர் விநியோகப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த சட்டம் 2022 தமிழ்நாடு சட்டம் 35/2022) இதன்படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன் 57 (7) வது பிரிவின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர்.எஸ்.வி அன்ட்

கோ, ஒப்பந்ததாரர் ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,48,516/-ஐ, திருவாளர்.எஸ்.வி அன்ட் கோ, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

.அலுவலகக் குறிப்பு :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண். இ1/1268 /2026 (ம-1)

543.) பதிவு செய்யப்பட்டது.

47.) ஈரோடு மாநகராட்சியில் தற்போது மாநகராட்சிக்குட்பட்ட அரசு, மாநகராட்சி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு காலை உணவு திட்டம் செயல்பாட்டில் உள்ளது. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச.ந 4-1) துறை, அரசாணை (நிலை) எண். 20 நாள்: 15.07.2026ன்படி பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டத்தின் கீழ் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து அரசு, மாநகராட்சி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு காலை உணவு திட்டம் விரிவுப்படுத்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட காலை உணவு திட்ட விரிவாக்கம் 15.09.2026 தேதி முதல் செயல்படுத்தப்பட உள்ளதால் மண்டலம்-1 மற்றும் மண்டலம்-2க்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து அரசு, மாநகராட்சி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு தேவையான எவர் சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்களை வாங்கும் பணியினை ரூ.8.70 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1,) மாமன்றம் அனுமதி வழங்கலாம்

2,) பணியின் அவசர அவசியத்தினை கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்

கோப்பு எண்.இ1./4176.2026 (மையம்)

544.) அலுவலககுறிப்புஅனுமதிக்கப்பட்டது

48.) ஈரோடு மாநகராட்சியில் தற்போது மாநகராட்சிக்குட்பட்ட அரசு, மாநகராட்சி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு காலை உணவு திட்டம் செயல்பாட்டில் உள்ளது. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச.ந 4-1) துறை, அரசாணை (நிலை) எண். 20 நாள்: 15.07.2026ன்படி பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டத்தின் கீழ் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து அரசு, மாநகராட்சி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு காலை உணவு திட்டம் விரிவுப்படுத்தி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட காலை உணவு திட்ட விரிவாக்கம் 15.09.2026 தேதி முதல் செயல்படுத்தப்பட உள்ளதால் மண்டலம்-3 மற்றும் மண்டலம்-4க்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து அரசு, மாநகராட்சி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு தேவையான எவர் சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்களை வாங்கும் பணியினை ரூ.5.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1,) மாமன்றம் அனுமதி வழங்கலாம்

2,) பணியின் அவசர அவசியத்தினை கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்

கோப்பு எண்.இ1./4177.2026 (மையம்)

545.) அலுவலககுறிப்புஅனுமதிக்கப்பட்டது

49.) ஆணையாளர், தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அலுவலகம், கருங்கல்பாளையம், ஈரோடு அவர்களின் கடிதம் No.CB/SLM/DO-ED/Comp/7AProceedings/90399/E-11/2026 நாள்.20.03.2026 கடிதத்தில் ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3ல் பணிபுரிந்து வரும் அம்மா உணவகம் பணியாளர்களுக்கு 06/2013 முதல் 02/2017 வரை உள்ள காலத்திற்கு கீழ்காணும் விபரப்படி வருங்கால வைப்பு நிதி செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

PARTICULARS	DUES ASSESSED
Dues for the Period of June 2013 to February2017	
EPF Contribution A/C. No: 01 EE	974802
EPF Contribution A/C. No: 01 ER	298127
EPF Administrative A/C. No: 02	76462
EPF Contribution A/C. No: 10	676675
12861 EDLI Fund Contribution A/C. No: 21	40617
EDLI Fund Admin Charge A/C. No: 22	812
Penalty A/C. No: 02 (Non-Appearance of virtual Hearing & Non-Submission of Records) u/s 32 CPC 1908	0
மொத்தம்	2067495

எனவே மேற்படித்தொகை ரூ.20,67,495/-ஐ செலுத்த ஆணையாளர் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி அலுவலகத்திற்கு செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

அனுமதிக்கலாம்

கோப்பு எண்.1571/2026/பி1(ம3)

546.) அனுமதிக்கப்பட்டது

50.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4, வார்டு எண்.56, ஈரோடு 'இ' கிராமம், காசிபாளையம் கிராமம், ரீ.ச.எண்.989/7A-ல், 0.69 ஏக்கர் (அ) 2795.00 ச.மீ கொண்ட இடத்தில் உத்தேசித்துள்ள 12 குடியிருப்புகள் கொண்ட மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) மாவட்ட ஊரமைப்பு அலுவலகம், ஈரோடு மாவட்டம் அவர்களின் இணையதள செயல்முறை ந.க.எண். ZO2VXGQG/2026/TCP நாள்.19.08.2026-ல் மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு அனுமதி எண்.SWP/DTCP/ERODE/LAYOUTAPPROVAL NO.216/2026 மற்றும் SWP/DTCP/ERODE/LPA/PLANNING NO. 22 /2026 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் மனுதாரர் திரு. தங்கவேலு மற்றும் நான்கு நபர்களுக்கு வழங்கப்பட்டு மேல் நடவடிக்கைக்காக மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் இருந்து ஈரோடு மாநகராட்சிக்கு உத்தேச மனைபிரிவு இறுதி ஒப்புதலுக்காக வரப்பெற்றுள்ளது.

மேற்படி மனைப்பிரிவின் வரைபடத்தில் கண்டுள்ள 921.185 ச.மீ பரப்பு சாலைகள், 13.71 ச.மீ பரப்பு பொது உபயோக இடம், தானசாசன பதிவு எண். 3117/2026, நாள். 03.06.2026-ன் மூலம் ஈரோடு மாநகராட்சி ஆணையாளருக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டும் மற்றும் 12.59 ச.மீ பரப்பு மின் பகிர்மான கழகத்திற்கான திறவிடம்) தானசாசன பதிவு எண். 3118/2026, நாள். 03.06.2026-ன் மூலம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மேற்பார்வை பொறியாளர் அவர்களுக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இடத்தில் உத்தேசித்துள்ள 12 மனைகள் கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு விண்ணப்பதாரரால் அரசாணை எண். 181 நாள். 09.12.2020 -ன் படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022 டிபி -2 நாள். 20.10.2022 - ன் படியும் சாலை வசதி, குடிநீர் குழாய் மற்றும் மழைநீர் வடிகால் வசதி, தெருவிளக்கு மற்றும் பாதாள சாக்கடை ஆகிய பணிகள் முறையாக அமைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாணையின் படி மனைப்பிரிவு அபிவிருத்தி பணிகளின் உரிய கட்டணங்கள் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திய பின்பு இறுதி ஒப்புதல் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் வழங்கப்படும்.

எனவே அரசாணை எண். 181 நாள். 09.12.2020 -ன் படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022 டிபி-2 நாள். 20.10.2022-ன் படியும், மேற்படி சாலைகள் மற்றும் பொது உபயோக இடம் ஆகியவற்றை தானமாக பெறப்பட்டதற்கு நகர் ஊரமைப்பு துறையின் நிபந்தனைகளுடன் 12 மனைகள் கொண்ட உத்தேச மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்.இ1/2001/2026 (ம-4)

547.) அனுமதிக்கப்பட்டது

51.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் - 4 வார்டு எண். 52 காந்திஜி சாலை காளைமாட்டு சிலை அருகில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தின் தரைதளத்தில் கடை எண். 21 ல் பஞ்சாப் நேஷனல் வங்கியின் புதிய கிளை துவங்கப்பட உள்ளது. மேலும், இக்கட்டிடத்தில் வங்கி அமைக்கப்படும் அறையில் இரும்பு பெட்டக அறை, இரும்பு கம்பியுடன் கூடிய ஜன்னல்கள், ஏ.டி.எம் அறை, கழிப்பறை வசதி, சாய்வுதளம் போன்ற வசதிகளை செய்து தருமாறு உதவி ஆணையாளர், வருவாய் பிரிவு அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார். எனவே மேற்படி வணிக வளாகத்தில் வங்கி அமைப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க தயார் செய்யப்பட்டுள்ள

மதிப்பீடுத்தொகை ரூ.21.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1 அனுமதி வழங்கலாம்.

2 பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/ 1718 /2026 (ம-4)

548.) அனுமதிக்கப்பட்டது

52.) ஈரோடு மாநகராட்சி, மண்டலம்-3 வார்டு எண்.32க்குட்பட்ட பெருந்துறை சாலையினை இணைக்கும் சாலையான பாரதிதாசன் வீதி சந்திப்பில் சிறுபாலம் பழுதடைந்துள்ள காரணத்தால் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் ஆபத்து ஏற்படும் வகையில் இடையூறாகவும், சுகாதாரக்கேடு ஏற்படும் வகையில் இருந்தது மேற்படி பகுதியில் சிறுபாலத்தை புதியதாக அமைக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் (திருத்த சட்டம் 2022 தமிழ்நாடு சட்டம் 35/2022) இதன்படி திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-ன 57 (7) வது பிரிவின் கீழ் மேற்படி பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள்பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திருவாளர்.VETRI CONSTRUCTION. ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.4,49,993/-ஐ திருவாளர் VETRI CONSTRUCTION ஒப்பந்ததாரர் ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

பார்வைட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.இ1/3567/2025 (ம-3)

549.) பதிவு செய்யப்பட்டது.

53.) தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள்2023-இன் விதிகள் 248 மற்றும் 249 ஆகியவைகளின்கீழ், மாநகராட்சி ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பதிவேட்டில் வரிசை எண். 379 முதல் 384 முடிய பதிவு செய்யப்பட்டுள்ள பொருட்கள் (Subjects) மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் இத்துடன் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.இ1.4835.2023 (மையம்)

550.) பதிவு செய்யப்பட்டது

54.) நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு திட்டங்களை பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPP) முறையில் செயல்படுத்த தமிழக அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக ஈரோடு, ஒசூர், திருச்சிராப்பள்ளி, நாமக்கல் மற்றும் திருவண்ணாமலை மாநகராட்சிகளின் பழைய பேருந்து நிலையங்கள் பொதுமக்கள் தனியார் பங்களிப்பு முறையில் (Private Public Partnership) மேம்பாடு செய்யப்படும் என அரசால் அறிவிக்கப்பட்டது.

ஈரோடு மாநகர மக்களின் பொழுதுபோக்கு அம்சங்களை கருத்தில் கொண்டு ஈரோடு மாநகராட்சியின் வ.உ.சி.பூங்கா உலக தரத்தில் மேம்பாடு செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2105/2024/P1 நாள்.29.11.2024 மற்றும் தலைமை செயல்அலுவலர், தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், சென்னை அவர்களின் கடிதம்

ந.க.எண்.2901/TNIDB/2024 நாள்.01.01.2025 ஆகியவற்றின் வாயிலாக மேற்கண்ட இரண்டு பணிகளையும் பொதுமக்கள் தனியார் பங்களிப்பு முறையில் மேற்கொள்ள விரிவான சாத்தியக்கூறு அறிக்கை (Detailed Feasibility Report) தயார் செய்ய தனியார் ஆலோசகர் நியமிக்க கோரி நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு சேவை நிதிக்கழகம், சென்னை (TNUIFSL) நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து TNUIFSL, சென்னை நிறுவனத்தில் பராமரிக்கப்பட்டு வரும் திட்ட தயாரிப்பு நிதியின் கீழ்(PDGF) மேற்கண்ட பணிகளுக்கு விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயார் செய்ய தனியார் ஆலோசகர் நியமிக்க சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளின் மாமன்ற ஒப்புதல் பெற்று வழங்க நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் கடிதம். ந.க.எண். 2105/2024 /B1 நாள். 23.01.2025-ல் தெரிவிக்கப்பட்டது. அதன்படி மேற்படி இரண்டு பணிகளுக்கும் TNUIFSL நிறுவனத்தின் PDGF நிதியின் கீழ் கலந்தாலோசகரை நியமிக்க மாமன்ற தீர்மான எண்.57 நாள் 26.03.2025-ன் வாயிலாக ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்படி பணிகளுக்கு தனியார் ஆலோசகர் மூலம் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை (Detailed Feasibility Report) தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு மாநகராட்சி பழைய பேருந்து நிலையம் மற்றும் வ.உ.சி பூங்கா மேம்பாட்டு பணிகள் தனியார் பொதுமக்கள் பங்கீடு முறையில் (PPP) வடிவமைத்து கட்டி நிதி உதவி செய்து இயக்கி கைமாற்றும் முறையில்(Design, Build, Finance, Operate and Transfer) மேற்கொள்ள விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது அதன் விபரம் கீழ் வருமாறு.

<u>வ உ சி பூங்கா:</u>

வ.உ.சி பூங்கா வளாகத்தில் உள்ள 6.40 ஏக்கர் நிலத்தை 15 ஆண்டுகள் தனியாருக்கு வழங்க வேண்டும். இதற்காக சம்பந்தப்பட்ட தனியார் மாநகராட்சிக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் ரூ.1.00 இலட்சம் சலுகை கட்டணமாக செலுத்துவார். மேலும் மூன்றாண்டுக்கு ஒரு முறை 15% தொகை அதிகரித்து 15 வருடத்திற்கு மாநகராட்சிக்கு செலுத்துவார். இது மாநகராட்சிக்கு நிலையான வருவாயை அளிக்கக் கூடியது. இப்பணியை மேற்கொள்ளக்கூடிய ஒப்பந்ததாரர் மாநகராட்சி

மூலம் வழங்கப்படும் நிலத்தில் பாதுகாப்புடன் கூடிய குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பகுதிகள், சாகச பூங்கா, நடைபாதைகள், உடற்பயிற்சி கூடம், வயது வந்தோருக்கான உடற்பயிற்சி, பூங்கா இசை நீரூற்று, கண்காட்சி மேடை, திறந்தவெளி அரங்கம் மற்றும் உணவுக் கூடம் உள்ளிட்ட வசதிகளுடன் பூங்காவினை வடிவமைத்து கட்டி நிதி வசதியுடன் இயக்கம் செய்து 15 ஆண்டுகளுக்குப் பின் மாநகராட்சிக்கு உள்ளது உள்ளபடியே மாற்றம் (DBFOT) செய்வார். இத்திட்டம் பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்புடன்(PPP) மேற்கொள்ளப்படுவதால் 100% பங்களிப்பு தனியார் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. வ.உ.சி பூங்கா மேம்பாடு செய்யப்படுவதால் இப்பூங்கா வருவாய் ஈட்டும் நகர்புற சொத்தாக மாறுவதுடன் இம்மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டுவதுடன் குடிமக்களின் வாழ்க்கை தரம் மேம்படும்.

மேற்கண்டவாறு வ.உ.சி பூங்காவை தனியார் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் வடிவமைத்து, கட்டி, நிதி உதவி அளித்து, இயக்கி மற்றும் மாநகராட்சிக்கு கைமாற்றும் பணியினை (PPP-DBFOT) ரூ.15.37 கோடியில் மேற்கொள்ள அரசாணை (சில) எண்.100, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 12.03.2026 ன் வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

<u>சுதந்திர தின வெள்ளி விழா பேருந்து நிலையம்:</u>

மத்திய பேருந்து நிலையத்தில் 3 ஏக்கர் நிலத்தை 45 ஆண்டுகளுக்கு தனியாருக்கு ஒப்படைக்க வேண்டும். ஒப்பந்த காலம் முடிவுற்றவுடன் நிலமும் அதில் உருவாக்கப்பட்ட அனைத்து கட்டமைப்புகளும் மீண்டும் மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படும்.

மேற்கண்டவாறு ஒப்படைக்கப்படும் 3 ஏக்கர் நிலத்திற்கு ஆண்டுதோறும் சுமார் ரூ.2.20 கோடி கட்டணமாகவும் மூன்றாண்டுக்கு ஒரு முறை 15% தொகை அதிகரித்தும் 45 ஆண்டுகள் ஒப்பந்ததாரரால் செலுத்தப்படும் இது மாநகராட்சிக்கு நிலையான வருவாயை உருவாக்கும். மேலும் மேற்படி நிலத்திற்கான கட்டணத்தை தவிர திட்டத்தின் வணிக செயல்பாடுகளில் இருந்து கிடைக்கும் மொத்த வருவாயில்

குறைந்தபட்சம் 5 சதவீதம் வருவாய் பங்கினை (Revenue sharing) இம்மாநகராட்சிக்கு வழங்கப்படும்.

இத்திட்டம் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்படுவதால் மேற்கண்ட கட்டமைப்புகளுக்கு மாநகராட்சியின் முதலீட்டு செலவின சுமை குறைக்கப்படுவதுடன் தனியார் துறையின் முதலீடு மற்றும் நிபுணத்துவம் பயன்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் இப்பழைய பேருந்து நிலையம் அதிக மதிப்புள்ள வருவாய் ஈட்டும் நகர்ப்புற சொத்தாக மாறும் இதன் மூலம் மாநகராட்சிக்கு பொருளாதார பயன்கள் அதிகரிக்கும்.

மேலும் மாநகராட்சி மூலம் வழங்கப்படும் 3 ஏக்கர் நிலத்திற்கு ஆண்டு செலவு கட்டணம் மற்றும் வருவாய் பகிர்வு மூலம் கிடைக்கும் தொடர்ச்சியான வருவாய் நகர்ப்புற உட்கட்டமைப்பு பொது சேவைகள் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டிற்கான நிதி ஆதாரமாக இருந்து இம்மாநகராட்சியின் நீண்ட கால நிதி நிலைத்தன்மையை வலுப்படுத்தும் காரணியாகவும் உள்ளது.

மேற்கண்ட இரண்டு பணிகளையும் தனியார் பங்களிப்புடன் வடிவமைத்து,கட்டி இயக்கி நிதி உதவி செய்து பின்னர் கைமாற்றுவது (PPP-DBFOT) முறையில் மேற்கொள்வதால் இம்மாநகராட்சிக்கு செலவினமும் இன்றி ஆண்டுதோறும் குறிப்பிடத்தக்க வருவாயும் ஈட்டப்படும் என்பதால் மேற்கண்ட இரு திட்டங்களையும் பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற விபரத்தை மாமன்றத்தின் தகவலுக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:.

மாமன்றம் பதிவு செய்யலாம்

கோப்பு எண். இ1/465/2025 (மையம்)

551.) ஒத்தி வைக்கப்பட்டது.

55.) ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து அரசு, மாநகராட்சி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டம் விரிவுப்படுத்தும் பொருட்டு பள்ளி மாணவ மாணவியருக்கு தேவையான எவர் சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்களை வாங்கும் பணியினை கல்வி நிதி 2026-27-ன் கீழ் மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, கீழ்கண்ட பணிகளுக்கு E-tendering முறையில் 25.08.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் பொழுது பெறப்பட்ட விபரம் பின்வருமாறு,

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பீட்டு தொகை இலட்சம்.ரூ))	வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்தாரர்களின் விபரம்	அனுமதிக் -கப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும் விபரம்	குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் விபரம்
1.	ஈரோடு மாநகராட்சியில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின் கீழ் மண்டலம் -2 மற்றும் 1 க்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து அரசு, மாநகராட்சி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு தேவையான எவர் சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்களை வாங்கி வழங்குதல் பணி.	8.70	M/s. Balaguru Infra	(-) 25.71 % குறைவு	M/s. Balaguru Infra
			M/s. Thulir Infra Developers Pvt Ltd	(-) 20.00 % குறைவு	
			M/s. Srii Ganapathi Chemicals	(-) 20.00 % குறைவு	
			M/s. Sree Senthur Construction	(-) 14.29 % குறைவு	

2.	ஈரோடு மாநகராட்சியில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின் கீழ் மண்டலம் 3 மற்றும் 4-க்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து அரசு, மாநகராட்சி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு தேவையான எவர் சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்களை வாங்கி வழங்குதல் பணி.	5.30	Thiru. K.N.Prasanna	(-) 26.29 % குறைவு	Thiru. K.N.Prasanna
			M/s. Balaguru Infra	(-) 25.71 % குறைவு	
			M/s. Thulir Infra Developers Pvt Ltd	(-) 20.00 % குறைவு	
			M/s. Srii Ganapathi Chemicals	(-) 20.00 % குறைவு	
			M/s. Sree Senthur Construction	(-) 8.57 % குறைவு	

மேற்கண்ட 2 பணிகளுக்கு 1 சதவீதம் டேவணித்தொகையை ஒப்பந்ததாரர்கள் இணையதள வாயிலாக செலுத்தியுள்ளனர், எனவே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும் மற்றும் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தை ஏற்க மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண் இ.1/3919/2026(மையம்)

552.) அனுமதிக்கப்பட்டது.

56.) பொருள் : ஈரோடு மாநகராட்சி – மறு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி - ஓராண்டு மற்றும் மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு 25.082026 அன்று பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது உச்ச ஏலக் கேள்வி கோரியவர்களுக்கு குத்தகை உரிமம் வழங்க மாமன்றத்தின் அனுமதி கோருதல் - தொடர்பாக.

பார்வை : பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நாள்:25.08.2026

.....

ஈரோடு மாநகராட்சி 2026-2027 ஆம் ஆண்டுக்கான ஏலம் கோராத இனங்களுக்கு மறு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 25.08.2026 அன்று மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கீழ்க்கண்ட இனங்களுக்கு உச்சகேள்வி தொகை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்கள்.

வரிசை எண்	குத்தகையினம்	கடையின் பரப்பளவு	உயர்ந்த பட்ச ஏலதாரர் பெயர் திரு / திருமதி	அரசாங்க மதிப்பு ரூ.	உச்ச ஏலக் கேள்வி தொகை ரூ.
ஓராண்டு குத்தகை இனங்கள் (3 ஆண்டுகள் தொகுப்பு கால அளவு)					
1.	காந்திஜி ரோடு வணிக வளாகத்தில் அமைந்துள்ள LED DISPLAY விளம்பரம் செய்யும் பலகை	S.கலைவாணி		-	500000 (ஒப்பந்தப்புள்ளி)
மூன்றாண்டு குத்தகை இனங்கள் (12 ஆண்டுகள் தொகுப்பு கால அளவு)					
1.	காமராஜ்ரோடு வணிக வளாக தரைத்தளக் கடை எண். 08	192 ச.அடி	N.வெங்கடேசன்	9000/-	13500/-
			C.ஜோதீஸ்வரன்		12500/-
			T.யுவராஜா		10500/- (ஒப்பந்தப்புள்ளி)
2.	சோலார் புறநகர் பேருந்து நிலைய தரைத்தளக் கடை எண்.91	167.86 ச.அடி	S.ஜெயக்குமார்	10400/-	10500/-
3.	கனிமார்க்கெட் வணிக வளாக முதல்தளக் கடை எண்.185	200 ச.அடி	A.லட்சுமி	17900/-	18000/-

. வ.எண்.1-ல் கண்டுள்ள இனத்திற்கு 04.10.2024 அன்று நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் அரசு மதிப்பு ரூ.16,20,000/- என நிர்ணயம் செய்யப்பட்டது. திரு.சுரேஷ் என்பவர் ஏலத்தில் கலந்து கொண்டு ரூ.16,30,000/- க்கு உச்ச ஏலக் கேள்வி கோரி ஏலம் எடுத்துள்ளார். மேலும், குறைவான விளம்பரங்களே ஒளிபரப்பு செய்யப்படுவதாலும், குத்தகைதாரருக்கு நஷ்டம் ஏற்படுவதாலும் தொடர்ந்து ஏல இனத்தை நடத்த முடியவில்லை எனக்கூறி 31.03.2025 அன்று ஏல இனத்தை மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்து விட்டார். மேலும் இவ்வினத்தை 16

முறை தொடர்ந்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் ஒருவரும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள முன்வரவில்லை. தற்போது 25.08.2026 அன்று நடைபெற்ற பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளியில் திருமதி.கலைவாணி என்பவர் ரூ.5,00,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இது மிகவும் குறைவான ஒப்பந்தப்புள்ளி கேள்வியாக உள்ளதால் மீண்டும் மறு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.,

வ.எண். 2 - ல் கண்டுள்ள ஏல இனத்திற்கு மூன்று நபர்கள் கலந்து கொண்டனர். இதில் திரு.N.வெங்கடேசன் என்பவர் உச்ச ஏலக் கேள்வியாக ரூ.13500/- க்கு கோரியுள்ளார். இது அரசு மதிப்பினை கூட கூடுதலாக உள்ளது. எனவே இவ்வினத்தை உச்ச ஏலக் கேள்வி தொகையாக ஏற்று ஒப்படைப்பு செய்யலாம்.

வ.எண். 3 மற்றும் 4 - ல் கண்டுள்ள இனங்களுக்கு 1 நபர் வீதம் கலந்து கொண்டு உச்ச ஏலக் கேள்வி கோரியுள்ளனர். தற்போது இவ்வினங்களுக்கு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு கோரியுள்ள உச்ச ஏலக் கேள்வியானது அரசு மதிப்பினை விட சற்று கூடுதலாக உள்ளதால் உயர்ந்த பட்ச கேள்வியினை ஏற்று உச்ச பட்ச கேள்விதாரர்களுக்கு குத்தகை உரிமம் வழங்கலாம்.

மேற்படி உறுதி செய்யப்படும் குத்தகை இனத்தை தவிர இதர இனங்களை மீண்டும் தொடர்ந்து மின் ஏலம்/ மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு.எண். அ2/1609/2025(மையம்)

553.) அனுமதிக்கப்பட்டது.

57.) ஈரோடு மாநகராட்சியின் மைய அலுவலகம், நான்கு மண்டல அலுவலகங்கள் மற்றும் வரிவசூல் மையங்களில் 126 கணினிகள், 72 பிரிண்டர்கள் மற்றும் 11 நகலெடுக்கும் இயந்திரங்கள் தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது.

மேலும் அலுவலக பணிகளை விரைவாக மேற்கொள்ளும் பொருட்டு மேற்கண்ட சாதனங்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து பராமரிப்பு மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட கணிணிகள், பிரிண்டர்கள் மற்றும் நகலெடுக்கும் இயந்திரங்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை சரி செய்தல் மற்றும் இணைப்பு கேபிள்கள், மென்பொருள் ஏற்படும் பழுதுகளை சரி செய்தல் பணிகள் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் மூலம் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.50 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தினை கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/1421 /2026 (மையம்)

554.) அலுவலக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

மேயர். 31/8/26

இடம்- ஈரோடு

நாள். 24.08 2026

ஈரோடு மாநகராட்சி.

31/8/26